# மெய்யியல் நோக்கு

உண்மையை அறிந்துணர

## PHILOSOPHICAL JOURNAL



## உடையக்கூடியது! கவனம்!

மாற்றம் ஒன்றைத் தவிர

மற்றவை எல்லாம் மாறும் – உலகில்

உண்மையின் தேடலில்

அனைத்தும் உடையக்கூடியது!

கவனம்!

"உண்மையை அறிந்துணர்"

விழி: 06 பார்வை: 01 மாசி, 2006

# உள்ளடக்கம்

**வன்முறையற்ற தொடர்பாடல்**

- சூ. டக்ளஸ் மில்ரன் லோகு

Non-Violent Communication

-S. Douglas Milton Logu

**முரண்கைச் செல்நெறியும் மொழி விளையாட்டும்**

-சா. பி. கிருபானந்தன்

The Language Game in Conflict Negations

-S. F. Kirupananthan

**மனிதனுடைய வன்செயல்களும் அதனால் சூழலில் ஏற்படும் தாக்கமும்**

-S. A. ஜெஸ்ரின்

Human Violence and Ecological Damages

- S. A. Jestin

**வன்முறையியலின் மானிடவியல்**

-யோ. போல் றொகான்

The Anthropology of Violence

-J. Paul Rohan

**மென்முறையின் எதிர் வினையில் ஈழப் போராட்ட வரலாறு**

-M. கிங்ஸ்ரன் சுமன்ராஜ்

The History of Eelam Struggle on the Basis of Ahimsha (Non Violence)

- M. Kingston Suman Raj.

**சுதந்திரம் பற்றிய மெய்யியல் கண்ணோட்டமும் சமுதாயமும்**

-அ. றொக்சன் குருஸ்

Philosophical View on Freedom and Society

-A. Rocksan Croos

**அர்த்தத்தைத் தேடும்மனிதன்**

-G. ஜெயராசா

Man's Search for Meaning

-G. Jeyarasa

**ஒழுக்கவியலில் கருக்கலைப்பு**

-விமல்ராஜ், O.M.I

Abortion in Ethics

-P. Vimalraj,O.M.I

**அரசும் படைமாட்சியும்**

-V. எமில் எழில்ராஜ்

The State and the Need for a Military

-V. Emil Elil Raj

**மெய்யியல் பார்வையில் போரும் வன்முறையும்**

-T. குயின்சன் பெர்ணான்டோ

Philosophical Point of View of War and Violence

-T. Quinson Fernando

**மகாத்மா காந்தி**

-அ. மைக்டொனால்ட்

Mahatma Gandhi

-A. Mac Donald

Synopsis

Glossary

# மெய்யியல் நோக்கு
(வருடம் இருமுறை)

# A PHILOSOPHICAL JOURNAL
(Bi – annual)

விழி: 06 பார்வை: 01 மாசி - 2006

**Publishers:**

Faculty of Philosophy
Xavier' Seminary
Columbuthurai
Jaffna
Sri Lanka.

வெளியீடு:

மெய்யியல்துறை
சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
இலங்கை.

## "உண்மையை அறிந்துணர"

கல்வியாண்டு / Academic Year: 2005 – 2006

பருவம் / Semester: 01

ஐப்பசி — மாசி

October – February

2006

# மானிடவியலும் வன்முறையும்

எமது ஆய்வுச் செல்நெறிப்போக்கில் அவசியமாகக் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சிகண்ட இன்றைய உலகின் வன்முறைபற்றிய எதார்த்தத்தின் எதிர்வினையால் எமது மெய்யியல் நோக்கு அரையாண்டு சஞ்சிகையின் இவ்விதழின் தலைப்பின் தெரிவு அமைந்துள்ளது.

17வது நூற்றாண்டு மெய்யியலாளர் தோமஸ் ஹொப்ஸ் வன்முறைப் போக்குகள் எல்லா சமுதாயத்தினதும் இதயம் போன்றது என விளங்கிக்கொண்டார்.

குடும்பம், கிராமம் என்ற சிறிய அளவிலான குழுத் தொடங்கி, வர்க்கம், பால்வேறுபாடு, இனக்குழுக்கள், சமயப்பிரிவுகள் அனைத்தினதும் வாழ்வில் வன்முறையின் எதிர்வினைப்படுத்தல் இன்று சகஜமாக இருக்கிறது எனலாம். இவ்வன்முறை தமது சுயநிலைப்பாட்டில் பிறழ்வுபட்டவர்கள், அந்நியர்கள், குற்றவாளிகளின் செயற்பாடாக இருக்கலாம்; குடும்பத்தின் உறுப்பினரதோ, அயலவரினதோ செயற்பாடாக இருக்கலாம்; நாடுகளுக்கிடையிலான முரண்கைகளாக அமையலாம்; இவ்வாறு பல வடிவங்களில் வன்முறையானது அதீதமுறையில் அகண்ட நிலைப்பாட்டைக் கொண்டுள்ள தன்மையின் வெளிப்பாடே வன்முறைபற்றிய பல்வேறுபட்ட சமூக - விஞ்ஞான அணுகு முறையை வேண்டி நிற்கிறது.

இன்றைய மானிடவியலாளர்களுக்கு வன்முறைபற்றிய படிப்பு அதீதமான அகநிலை முரணேயாகும். சமுதாய வாழ்வின் விதி அடிப்படையிலேயே வன்முறையானது என தொமஸ் ஹொப்ஸ் வரையறுக்கவில்லை. ஆனால் சமூக சக வாழ்வை வன்முறைக்கு ஒரு மாற்றீடாகவே முன்வைத்தார். இயற்கை நிலையில் வன்முறையோடும், அச்சத்தோடும், மரணபீதியோடும் வாழ்ந்த மக்கள், ஓர் ஒப்பந்தம் செய்து ஒரு வல்லவனுக்கு தம்

இறைமையை விட்டுக்கொடுத்து சமூக - அரசியல் வாழ்வைத் தோற்றுவித்தனர். வன்முறை ஒரு வேண்டாத விருந்தாளி என்றும், எமது சமூகத்தின் அரசியல், இராணுவ சிக்கலில் ஒதுக்கப்பட வேண்டிய பிறழ்வு நடவடிக்கை என்றும் கணிக்கப்பட்டாலும், அதுவும் மானிடத்தின் அடிப்படை இயல்புகளில் ஒன்றாகும்.

இன்றைய வன்முறைபற்றிய அவதானிப்பு, மானிடவியல் ஆய்வுச் செல்நெறியில் மாற்றத்தையும், தரிசன வீச்சையும் கோருகின்றது. நவீன உலகத்தின் ஆய்வின் விரிவாக்க தளத்தில், நேருக்குநேரான அறிவியல் கடப்பாடு அனைவருக்கும் உள்ளது. சாய்மனைக்கதிரையின் சோம்பேறிக் கருத்தாக்கத்தைவிட, இன வன்முறை அல்லது சமூக யுத்தம் போன்ற உயர் மட்ட கருத்தாக்கம் பற்றியும் மானிடவியலாளர்களின் ஆய்வியல் அணுகு முறை வேண்டப்படுகிறது. ஆனால் வன்முறை பற்றிய ஆய்வானது சாவைத் துச்சமென மதிக்கும் வலுவுள்ள யுத்த கால பத்திரிகையாளர்கள் போல் இல்லாமல், சராசரி ஆய்வாளர்கள் போக முடியாத எல்லையையுடையது. இதனால் மேலும் கொள்கையளவிலும், செல்நெறிமட்டத்திலும் ஆய்வுச் செல்நெறியின் வலுவாக்கம் பற்றி அகமுரண் உருவாகிறது. ஆய்வுச் சூழமைவில் பங்கெடுப்பாளனின் அவதானிப்பிலும் பார்க்க தரம் குறைந்த தரவுகள், அரசியல் வரலாறுகள் மற்றும் உலக மட்டத்திலான உயர்மட்ட ஆய்வுத்தரவுகள் என்பன நீதியுடன் நியாயப்படுத்தப் பட்டுள்ளதா எனச்சில வேளைகளில் ஐயப்படலாம்.

வன்முறைபற்றிய மானிடவியலின் குதர்க்கமான மௌனம் சமூக விஞ்ஞானங்களின் ஆய்வுமுறைபற்றிய உள்ளக கருத்து முரண்பாட்டைத் தோற்றுவிக்கிறது. ஹொப்ஸின் கருத்துப்படி சமூக ஒப்பந்தத்தின் நோக்கம் கூட வன்முறையை புறம்போக்கிவிடுவ தாகும். சமூகத்தின் பரிணாம அமைப்பினால் வன்முறையை விளக்குவது கடினமாகும்.

இன்று சமூக விஞ்ஞானத்துறைகளில் மட்டுமல்ல; 20ம் நூற்றாண்டின் பின்கூற்று சமூகம் முழுவதுமே வன்முறையின் அகமுரணைப் பிரதிபலிக்கின்றது. மறுபுறத்தில் மானிட

வாழ்வினதும், மனித - ஆள்த்தன்மையினதும் பெருமைகளை உயித்துடிப்பான குரலாகவோ, மற்றும் தேசிய சட்டங்களிலும், அனைத்துலக மனித உரிமைகள் சாசனத்திலும் தெளிவாகப் பதியவில்லை. வாழ்வு தூயது; மனித உடல் தூயது; நாகரிகத்தின் அதி உயர் எல்லை இந்த ஒழுங்கைக் கடைப்பிடிப்பதாகும். இத்திருமுறைகள் சமூக வாழ்வில் உறுதியாகச் செயற்படுத்தப் பட்டால் திறந்த வன்முறை நிகழாது. (இதை நடைமுறைப் படுத்துவதற்கே ஒருவருக்கு வரையறையற்ற, அமைப்பு ரீதியான வன்முறை தேவைப்படும்) மறுபக்கத்தில் அண்மைய பத்தாண்டுகளில் வன்முறையின் செயற்பாட்டில், விழிப்பாக்கத்தில், எதிர்வினையில், அதுபற்றிய சமூக ஏற்றுக்கொள்ளுதலில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி உள்ளது. இன்று பெருமளவிலான ஊடகத்துறையினர், களிப்பூட்டும் தொழில் உலகில் வன்முறை விம்பங்களை உருவாக்குதலிலும், விநியோகித்தலிலும் வளர்ச்சியை மையப்படுத்துகின்றனர். இதனை பூகோளமயமாதல் எனவும் குறிப்பிட முனையலாம்.

புவியின் முகமெல்லாம் வன்முறையின் உயர்வுப் போக்கால் 'வன்முறை மனிதன்' என்ற கருத்தை உருவாக்கும் அவசரம் உள்ளது. இவ்வகையான சிந்தனையைத் தூண்டும் எண்ணத்துடன் இவ்விதழின் தலைப்பைத் தெரிவு செய்தோம். இங்கே இத்தலைப்பின் தரிசன வீச்செல்லைகளுக்கான கட்டுரைகளை முன்வைத்துள்ளோம். மானிடம் கருவில் இருக்கும் போதே வன்முறை தொடங்குகின்றது. அதனாலேயே கருக்கலைப்புப் பற்றிய ஆக்கமும் இடம் பெறுகிறது.

வன்முறை மனிதன் பற்றிய ஆய்வு முக்கியமெனக்கருதினால் மென்முறை மனிதன் பற்றிய ஆய்வும் முக்கியமே. இதனையும், எமது சமூக - அரசியல் சூழமைவையும் கருத்தில்கொண்டு அகிம்சை பற்றிய கட்டுரைகளையும் சேர்த்துள்ளோம்.

**From the Editor...**

## Anthropology and Violence

The choice of subject for the present issue of our philosophical journal was inspired both by the topicality of violence in the world today and by the considerable extent to which these developments in the wider world have come to be represented in our own ongoing research.

The seventeenth century philosopher Thomas Hobbes already understood that the implication of violence is at the heart of any society. Given the variety of societies, therefore, violence is an extremely wide and diverse phenomenon, that invites vastly different social-science approaches, from a variety of levels ranging from face-to-face relations in small groups like the family, village, classes, genders, ethnic groups, religious denominations etc.

The study of violence presents far greater dilemmas for anthropologists today. Hobbes defined social life not as essentially violent in itself, but rather as an alternative to violence. Violence was regarded as the exception, as the uninvited guest, relegated to deviant behaviour and political and military crises in our own society and to the remote periphery of exotic places. Therefore the present-day attention for violence also implies a shift in level and scale of analysis.

The embarrassed silence, in classic anthropology about violence has an internal reason springing from the systematic nature of the social sciences themselves. Meanwhile violence has come to represent a profound dilemma, not only of social science today, but of late twentieth century society as a whole. Life is sacred, the human body is sacred and strict adherence to these tenets is the hallmark of civilisation; if this canon were strictly implemented in social life, open violence would not occur. Large sections of the media and

entertainment industry today concentrate on the production and diffusion of images of violence and often these images do nothing but depict true life situations.

So there is an urgency to formulate the concept of 'Homo Violens' in the face of escalation of violence throughout the face of the earth. As a way of instigating this type of thinking we have chosen this topic for our present issue. Here we have selected varied articles under this topic: Violence against man even starts from the womb of the mother when human being is in the state of a foetus.

When we consider 'homo violens' (violent man), it is our urgent duty also to consider man as 'homo pacatus' (non-violent man). So we have included also articles on non-violence in its general aspect and also basing on our political context.

தீமை செய்தவற்கும், நன்மை செய்வது
உத்தமர் பண்பாடு

-குருநானக்.

மன்னிக்கும் குணத்தை விடவும்
வலிமையான ஆயுதம் எதுவுமில்லை.

-குருநானக்.

எந்த நிலையிலும் தைரியத்தை
இழக்காதவனே பெரும் விவேகியாவான்.

-ஜோம்ஸ்.

கடுமையாக உழைக்கும் எந்த மனிதனும்
ஏழ்மையை அடையமாட்டான்.

-லாண்டன்.

# வன்முறையற்ற தொடர்பாடல்

- சூ. டக்ளஸ் மில்ரன் லோகு

முதலாக

“இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்பக் காய்கவர்ந்தற்று” என்பது வள்ளுவன் வாக்கு. அறம் பயக்கும் இனிய சொற்கள் தனக்கு உளவாயிருக்க அவற்றைக் கூறாது பாவம் பயக்கும் இன்னாத சொற்களை ஒருவன் கூறுதல் இனிய கனிகள் தன் கைக்கண் உளவாயிருக்க அவற்றை நுகராது இன்னாத காய்களை நுகர்ந்ததனோடு ஒக்கும், என்று பரிமேலழகர் விளக்கம் தருகின்றார்.

இன்று தனி நபர்களுக்கிடையே, குடும்பங்களிலே, குழுமங்களிலே, சமூகத்திலே ஏன் நாடுகளுக்கிடையே கசப்புணர்வும், வெறுப்பும், சண்டை சச்சரவும் ஏற்படக் காரணமாக அமைவது எதுவென்று எண்ணிப்பார்ப்பின், அடிப்படையிலே ‘வார்த்தைப் பிரயோகங்களின் வக்கிரத்தன்மைகளே’ என்று சொன்னால் அது மிகையாகா. ஆகவே வார்த்தைகளை எப்படி பிரயோகிப்பது, உரையாடல்களை, தொடர்பாடல்களை எப்படி வன்முறையற்ற வகையில் வழங்குவது என்பது பற்றி “வன்முறையற்ற தொடர்பாடல்” (Non Violent Communication) எனும் பாடவிதானம் பல பரப்புரைகளைத் தருகின்றது. அது பற்றி இக்கட்டுரையினூடு சிறிது சிந்திப்போம்.

### வன்முறையற்ற தொடர்பாடற் பாடவிதான நிறுவுனர் பற்றி...

மருத்துவ உளவியலில் கலாநிதி பட்டம் பெற்ற மார்ஷல் ரொசன்பேர்க் (Marshall Rosenberg) வன்முறையற்ற தொடர்பாடல் நிலைய கல்விப்பணியின் நிறுவுனராகவும் இயக்குனராகவும் இருந்து செயலாற்றுகின்றார். கலாநிதி ரொசன்பேர்க் 1960ம் ஆண்டு தொடக்கம் வன்முறையற்ற தொடர்பாடல் (NVC) யுக்திகளை நடுவு நிலைமை, தொடர்பாடல் பயிற்சிகளுக்கு பயன்படுத்தி வருகிறார். 1984ம் ஆண்டிலே வன்முறையற்ற தொடர்பாடலுக்கான நிலையத்தை (CNVC) நிறுவிய அன்று தொடக்கம் நூற்று நாற்பதிற்கும் மேற்பட்ட

சிறப்புத் தேர்ச்சியாளர்களின் செயற்பாட்டின் கீழ் ஆறு கண்டங்களிலுள்ள முப்பதிற்கும் அதிகமான நாடுகளிலே இந்த CNVC வளர்ந்து நிற்கின்றது. இந்த CNVC - வாழ்வுப் பயிற்சிப் பட்டறைகளை வழங்கி வருகின்றது.

கலாநிதி மார்ஷல் ரொசன்பேர்க் போரினாலே பெரிதும் பாதிக்கப்பட்ட ருவாண்டா, புருண்டி, நைஜீரியா, மலேசியா, இந்தோனேஷியா, இலங்கை, மத்திய கிழக்கு நாடுகள், கொலம்பியா, சேர்பியா, குரோஷியா, வடஅயர்லாந்து ஆகிய நாடுகளிலே அமைதிச் செயற்பாடுகளை இதன் மூலம் ஆரம்பித்திருக்கின்றார். அவர் உலகின் பல பாகங்களையும் சுற்றிவந்து முரண்பாடுகளுக்கு நடுவுநிலமை வகித்து, வன்முறையற்ற தொடர்பாடலுக்கான பயிற்சிகள் வழங்குதல் என்பவற்றில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### தொடர்பாடலின் இரு வேறுபட்ட இயல்புகள் பற்றி...

நாம் பேசும் வார்த்தைப் பிரயோகங்களில் இரு வேறுபட்ட இயல்புகள் காணப்படுகின்றன. சில வார்த்தைப் பிரயோகங்கள் அடுத்தவரை இலகுவில் காயப்படுத்தி விடுகின்றன. மற்றும் சில பிறரை மகிழ்விக்கின்றன; திருப்திப்படுத்துகின்றன; தேற்றுகின்றன. மார்ஷல் ரொசன்பேர்க், இந்த இரு வேறுபட்ட இயல்புகளுக்கும் இரு மிருகங்களின் பெயர்களைக் கொடுத்து அதனடிப்படையில் விளக்கிச் செல்கின்றார். பொதுவாக ஒவ்வொருவரிடத்திலும் ஓநாய் (Jackal), ஒட்டகச்சிவிங்கி (Giraffe), மனநிலைகள் காணப்படுகின்றன என்றும் அதனதன் வெளிப்பாடுகளிலிருந்து நமது உரையாடல்கள் வன்முறையுடையதாக அல்லது வன்முறையற்றதாக பிரதிபலிக்கின்றன என்கிறார்.

### ஓநாய் (Jackal) மனநிலையின் இயல்புகள் பற்றி...

நம்முடைய தொடக்க வயது தொடங்கி நம்மில் பலர் ஓநாய் மனநிலைத்தன்மை சார்ந்தே பயிற்றப்பட்டு, படிப்பிக்கப்பட்டு, வார்த்தைப் பிரயோகத்தை வெளிப்படுத்தி சிந்தித்து வந்திருக்கிறோம் என்பதை நம் பட்டறிவின்கண் பகுத்தறியலாம். அடுத்தவர் மேல் எதிர்மறையான முத்திரை குத்தும் தன்மைகள் இம்மனநிலையில் இருந்தே தோற்றம் பெறுகின்றன. இது ஆராய்வதற்கும் விமர்சிப்பதற்கு மான தாராளமான சொற்பதங்களைக் கொண்டிருக்கின்றது. ஓநாய்

இயல்பு பிறரிலே என்னென்ன தவறுகள் காணப்படுகின்றன என்பதைக் கோடிட்டுக் காட்டுவதில் வல்லமையுடையதாக காணப்படுகின்றது.

ஓநாய் இயல்பு தன்னுடைய உடனடித் தேவைகளை உடனடியாக நிகழ்காலத்தில் பூர்த்தி செய்வதில் அவசரப்படுகிறது; குறியாய் இருக்கிறது. ஆனால் அதன் பின் விளைவுகளைப்பற்றி அக்கறைப்படாது. ஓநாய் இயல்புடையவர்கள் பிறரை சடுதியாக வகைப்படுத்தல், சோதித்தறிதல் மூலம் அவர்களை விளங்கிக் கொள்கிறோம் என்று நம்புகிறார்கள். ஓநாய் இயல்பு அடுத்தவர் மேல் "அவன் ஓர் மூடன்" அல்லது "அவன் கெட்டவன்" அல்லது "அவர்கள் கலாச்சாரத்தில் தாழ்ந்தவர்கள்" என்றவாறாக நாமம் சூட்டி நடைமுறையில் மகிழ்ச்சியற்ற நிலையில் காணப்படும். இதனுடைய மொழிப்பாவனை தலையிலிருந்தே புறப்படும். ஓநாய் இயல்புடையவர்கள் சரி – தவறு, நன்மை – தீமை என்று தீர்ப்பிடும் உளப்பாங்கை மையமாக வைத்தே மக்களை வகைப்படுத்திக் கணிப்பர். இம்மனநிலை அடிப்படையில் தற்காப்பு, முரண்பாடு, பதில் தாக்குதல் என்பவற்றையே தூண்டுகின்றன.

## ஒட்டகச்சிவிங்கி (Giraffe) மனநிலையின் இயல்புகள் பற்றி...

ஒட்டகச்சிவிங்கி மனநிலையின் மொழி இதயத்திலிருந்து புறப்படுகின்றது என்கிறார் ரொசன்பேர்க். இம்மனநிலை நமக்கும் அடுத்தவருக்குமிடையிலான நன்னிலையை அதிகரிக்கும் ஒரு தொடர்பாடலை இயல்பிலேயே கொண்டிருக்கிறது. ஒட்டகச்சிவிங்கி எனும் விலங்கு ஏனைய தரைவாழ் விலங்குகளை விட பெரிதான இதயத்தைக் கொண்டிருப்பதுடன், உயரமாகவும் காணப்படுகின்றது. அதேபோல் இம்மனநிலை உடையவர்கள் இதயத்திலிருந்து உரையாடுபவர்களாக, முன்நோக்கி பார்ப்பவர்களாக, தங்களுடைய வாழ்வை திடமிக்கதாகவும் நேர்மையான முறையில் வாழ்பவர்களாகவும் காணப்படுவர். இம்மனநிலை உடையோர் தமக்குள்ளே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அடுத்தவரை தீர்ப்பிடாமல் வெளிக் கொணர்வர். இம்மனநிலை "ஆம்" என்று சொல்லும் வாய்ப்பை அடுத்தவருக்கு வழங்குகிறது. அத்தோடு "இல்லை" என்ற பதிலையும் இம்மனநிலை மதித்து செயற்படுகிறது.

## வேண்டுகேள் விடுத்தல், உணர்விற்கு உரிமை கொடுத்தல் பற்றி...

மார்ஷல் ரொசன்பேர்க், ஒட்டகச்சிவிங்கி மனநிலையின் பேச்சு "வேண்டுகோளின் மொழி" என்றும் ஓநாய் மனநிலையின் பேச்சு "வற்புறுத்தலின் மொழி" என்றும் கூறுகின்றார். அடுத்தவர் என்ன உணர்வைக் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்பாமல் அவர் என்ன செய்ய வேண்டும் என்ற விருப்பத்தின் தன்மைபட, ஒட்டகச்சிவிங்கி மனநிலை உடையவராய் நாம் நமது வேண்டுகோளை வெளிப்படுத்தலாம். ஏதாவது ஒன்றை 'செய்ய வேண்டும்', 'செய்தே ஆகவேண்டும்', 'கட்டாயமாக செய்ய வேண்டும்' என்று பிறருக்கு கூறுவது ஏற்படுத்தும் பின்னடைவு வேறு ஒன்றிலும் இல்லை. இவ்வாறான சொற்பதங்கள் "தெரிவு செய்தல்" என்பதை இல்லாதொழிக்கிறது. "தெரிவு செய்தல்" என்ற சுதந்திரம் இல்லாவிடில் வாழ்க்கை அடிமைத்தனமானதாக ஆகிவிடும். "நான் இதை செய்தே ஆகவேண்டும்; ஏனென்றால் இது என் மேலதிகாரியின் கட்டளை" என்பது சுதந்திரவிருப்பை தொலைத்தவர் கூறும் பதிலாகிறது. இவ்வாறான உளப்பாங்குடையோர் தங்களுடைய செயற்பாடுகளுக்கு தாம் உரிமையேற்பதில்லை.

ஒட்டகச்சிவிங்கி மனநிலை உடையோர் இறந்த காலத்தில் வேண்டுகோள் விடுப்பதில்லை. "நீ இதைச் செய்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்" என்பது போன்று இம்மனநிலை உடையோர் சொல்வதும் இல்லை; நினைப்பதும் கூட இல்லை. மாறாக தங்களுக்கு தற்போது என்ன வேண்டும் என்பதை தெளிவாக எடுத்துரைப்பதுடன் தங்கள் உணர்வுகளுக்கு தாமே பெறுப்பேற்பர். அத்துடன் தம் தேவைகளே தம்முடைய உணர்வுகளுக்கு காரணமாகின்றன என்பதில் நிதானமாக இருப்பர். உதாரணமாக ஒரு தாய் அவளுடைய மகனின் விளையாட்டுப் பொருட்கள் அறை முழுவதும் சிதறிக் கிடப்பதால் குழப்பமடைகிறாள் என்று வைத்துக்கொள்வோம். அப்போது அவள் தன்னுடைய உணர்வு "கோபமாக" இருக்கிறது என அடையாளம் கண்டு கொள்கிறாள். கோப உணர்வு ஏற்படுவதற்குக் காரணமான தன் "நிறைவேறாத தேவை" என்ன? என்பது பற்றி சிந்திக்கின்றாள். வீடு வாசல் அழகாகவும் ஒழுங்காகவும் இருக்க வேண்டுமென்பது அவளது விருப்பம். எனவே அத்தாய் "வீடு வாசல் ஒழுங்காக இருக்க

வேண்டும் என்பது என் விருப்பம். "இப்போது அது ஒழுங்கில்லாமல் இருக்கிறதால் நான் கோபமாய் உணர்கிறேன்", என்று சொல்லி தன் கோபத்திற்கு தான் பொறுப்பேற்கிறாள். இறுதியாக, "இந்த விளையாட்டுப் பொருட்களை ஒழுங்காக்கி அறையை அழகாக்கினால் நான் மகிழ்ச்சியடைவேன்" என்ற தன் வேண்டுகோளை தெளிவாக வெளிக்கொணர்வாள்.

ஓநாய் மனநிலையுடையோர், "உன்னாலேதான் நான் கோபமாக இருக்கிறேன்...." என்று சொல்ல ஒட்டகச்சிவிங்கி மனநிலை உடையோர் "நான் கோபமாக இருக்கிறேன்; ஏனென்றால் என் தேவை...." என்று பதிலளிப்பர். ஆகவே நம் உணர்வுகளுக்கு அடுத்தவர் காரணமல்ல; மாறாக நம் சொந்த எண்ணங்களும், தேவைகளும், ஆசைகளுமே காரணமாகின்றன என்பதை ஒட்டகச்சிவிங்கி மனநிலையுடையோர் அறிந்திருக்கின்றனர். நாம் வைத்திருக்கும் எண்ணங்களே நம்மை கோபம் போன்ற உணர்வு நிலைகளுக்கு ஆளாக்குகிறதேயொழிய அடுத்தவர் நமக்கு செய்யும் ஏதேனும் செயல்கள் அல்ல. மறுபுறம் ஓநாய் மனநிலை அடுத்தவர்தான் தன் கோபத்திற்கான மூல காரணம் என்று நோக்குகிறது. நம்முடைய உணர்வுகள், நமக்குள்ளே என்ன நடக்கிறது என்பதால் அல்லாமல் வெளியே என்ன நடக்கிறது என்பதாலேயே ஏற்படுகிறது என்று கணிப்பதன் பெறுபேறாகவே சொல் சார்ந்த அல்லது உடல் சார்ந்த வன்முறை ஏற்படுகிறது.

### தொடர்பாடலின் இணைப்பை தக்கவைத்தல் பற்றி...

ஒட்டகச்சிவிங்கி மனநிலை உடையவராக நாம் நமது உணர்வுகளுக்கு நாமே பொறுப்பேற்கிறோம். அதே வேளை நாம் நலமாக உணரும் விதத்தில் பிறர் செயற்பட ஒரு சந்தர்ப்பத்தை அவர்களுக்கு வழங்க முயல்வதூடாக தொடர்பாடலின் இணைப்பு தக்க வைக்கப்படுகிறது. ஒரு மகன் தன் தந்தையிடமிருந்து கூடுதலான மரியாதையைப்பெற விரும்புகிறான் என வைத்துக் கொள்வோம். அவனுடைய தகப்பன் அவனுக்காக தானே தீர்மானம் எடுத்தது அவனுக்கு கோபத்தை உண்டுபண்ணியிருக்கிறது என்பதில் தன் கோப உணர்வை அடையாளம் கண்டு, "தயவு செய்து எனக்கான பாடப்புத்தகங்களை வாங்குவதற்கு முன்னால் என்னென்ன புத்தகங்கள் எனக்குத் தேவையாக உள்ளன என்பதை என்னிடம்

கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று கூறுவது முரண்பாட்டை விலக்கி தொடர்பாடலின் இணைப்பைப் பேணுவதாக அமையும். ஒட்டகச்சிவிங்கி மனநிலை தனக்கு என்ன தேவையாக உள்ளது என்று உரைத்து நிற்கும். மாறாக என்ன தனக்கு தேவையில்லை அல்லது விருப்பமில்லை என்று சொல்லாது. "அதை நிறுத்து", "இதைச் செய்", அல்லது "அங்கே போ" என்பன போன்ற கட்டளைகள் நடத்தை மாற்றத்தை ஒருவரிடத்திலே தூண்டாது. ஏனெனில் மனிதர் வேண்டாத ஒன்றை, விரும்பாத ஒன்றை ஒருபோதும் செய்ய மாட்டார்கள்.

ஒட்டகச்சிவிங்கி மனநிலை, ஒவ்வொருவரும் நலம் பெற்று நல்லுணர்வுடன் வாழும் ஒரு தொடர்பு நிலையை அடிப்படையில் தேடி நிற்கின்றது. குறை கூறுதல், குற்ற உணர்வு அல்லது தண்டனை போன்றவற்றால் எவருமே கட்டாயப்படுத்தப்பட்டு செயற்படுகிறோம் என்ற உணர்வை கொண்டிருக்கக் கூடாது. சுருங்கக் கூறின் ஒட்டகச்சிவிங்கி மனநிலையோரின் சிந்தனைகள் ஒரு சுபீட்சத்தை, அமைதியை வாழும் இடத்திலே உருவாக்கி நிற்கின்றது.

## முடிவாக......

"இன் சொல் இனி தீன்றல் காண்பான எவன்கொலோ
வன் சொல் வழங்குவது" (குறள் 99)

பிறர் கூறும் இன்சொல் தனக்கு இன்பம் பயத்தலை அனுபவித்து அறிகின்றவன், அது நிற்கப் பிறர்மட்டில் வன் சொல்லைச் சொல்வது என்ன பயன் கருதி?

ஆகவே நம்முடைய வாழ்க்கையை வன்முறையற்ற உரையாடல்வழி வாழ்வாக்கும்போது அங்கே தகராறுகள், மன அழுத்தங்கள், குழப்பங்கள், கோபதாபங்களுக்கு இடம் இல்லாமல் அமைதியும் அன்பும், உறவும் சுபீட்சமும், சாந்தியும் சமாதானமும் மலரும். வீடும் நாடும் சுகந்தம் பெறும்.

# முரண்கைச் செல்நெறியும் மொழி விளையாட்டும்

- சா. பி. கிருபானந்தன்

சமாதானம் என்ற சொல் தற்காலத்தில் பல வேறுபட்ட பண்பாட்டுப் பின்புலத்தில் தொடர்பு ஊடகங்களில் அர்த்தமற்ற - அர்த்தத்தோடு மிதப்புப்பெற்றுள்ள போதிலும், சமாதானத்தின் செயற்பாட்டுத் தளந்தான் அந்த சொல்லுக்குரிய தகுந்த அர்த்தத்தைக் கொடுக்கும். உதாரணமாக தற்போது இலங்கைத் தீவில் சமாதானம் என்றால் ஜெனிவா பேச்சு ஆரம்பம், போர் அற்ற நிலை, A 9 பாதை திறப்பு, ஆயுதக்களைவு, கொழும்பில் குண்டுவெடிக்காத நிலை, அம்புலன்ஸ் அபாய ஓசை கேட்காதநிலை, ஒட்டுக் குழுக்களின் அடக்கம், தேசிய பாதுகாப்பு என்ற பல அர்த்தங்களோடு பல தொடர்பு ஊடகங்களில் பிரயோகிக்கப்படுகிறது.

## பண்பாடுகளுக்கிடையிலான தொடர்பு

இன்றைய நவீன முரண்கைகள் பலவும் அடிப்படையில் பண்பாடுகளுக் கிடையிலான முரண்கைகளே. உதாரணமாக இஸ்ரேல், பலஸ்தீனா, சிறிலங்காவில் உள்ள முரண்கைகள். "இவைகளையும் இன்னும் மற்றைய பிரதானமானவைகளையும் எடுத்துக்கொண்டால், இப்படிப்பட்ட முரண்கைத் தீர்வுகளில் தொடர்பு செயற்பாடுகளே முக்கியமானது. எப்படியாயினும் சிறிய அளவிலான தீர்வு முயற்சிகளே பாவிக்கப்பட்டுள்ளன" என "Communicating Across Cultures" என்ற நூலின் ஆசிரியரான மொரின் குயிர்ஹாம் லூட்டன் பண்பாடுகளுக்கிடையிலான அமைப்பில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டுள்ளார்[1]. பண்பாடுகளுக்கிடையிலான தொடர்பே இன்றைய பல முரண்கைகளின் தீர்வுகளுக்கான திறவுகோலாகும்.

---

[1] http://intermundo.net/ ஐக்கிய இராச்சியம் வெஸ்ட் மின்ஸ்ரர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மௌரின் குர்குயிர்ஹாம் உலக முரண்கைளின் தீர்வுக்கு பண்பாடுகளுக்கிடையிலான் தொடர்பாக்கமே திறவுகோலாகும் என நம்புகிறார்.

## நாடுகளுக்குள் ஏற்படும் மோதல்

இன்று பெரும்பாலான முரண்கைகள் நாடுகளுக்கிடையிலான போர் என்பதை விடுத்து நாட்டுக்குள் நடைபெறும் மோதலாக, குறிப்பாக அதன் சமூகங்களுக்கிடையிலான போராகவே மாறியுள்ளது. வெளிநாட்டுப் போரின்போது, பொது எதிரியாக அடையாளப் படுத்தப்படுவோர் நாடுகளுக்கு வெளியே காணப்படுவதால் நாட்டுப்பற்று, தேசியவாதம் என்ற சுலோகத்திலும் மற்றும் இதே கருத்தியலிலும் போர் தொடரப்படலாம் அல்லது முடிவுக்குக் கொணரப்படலாம். ஆனால் உள்ளக முரண்கைகளில் எதிரி என அடையாளப்படுத்தப்படுபவர் அருகில் உள்ளவர் என்பதாலும், நாட்டுப்பற்று, தேசியவாதம் என்பன இன, பண்பாட்டு அடையாளங்களுக்குள்ளேயே விளங்கப்படுவதாலும், முரண்கைகள் நாளுக்கு நாள் மாறுவதையும், மற்றும் ஏற்றமுறுவதையும் காணலாம்.

## பண்பாடு என்றால் என்ன?

நாம் பண்பாடு என எண்ணும்போது, மொழி, உடை, உணவு, கலை, இலக்கியம் போன்ற அடையாளங்களோடு, மற்றைய நடைமுறைகள், வழமையான செயற்பாடுகள் என்னும் அம்சங்களையும் எண்ணுகிறோம். பண்பாட்டின் முக்கிய பகுதி விழுமியங்கள், நம்பிக்கைகள், மனநிலைப்பாடுகள் என்பதை மறக்கக்கூடாது. (உதாரணமாக தனியாளின் சுயவரையறை, அல்லது சமூகப்பொதுமை, போட்டி, கூட்டுறவு, குழுவாழ்வை நெறிப்படுத்தும் சமூக வரையறைகள், ஒழுக்க நிலைப்பாடுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்). இவற்றைவிட குறிப்பிட்ட சமூகத்தின் அரசியல் கட்டமைப்பு (அதிகாரத்தின் அல்லது சக்தியின் மையம்) பொருண்மியத்தளம், (எவ்வாறு மக்கள் தமக்குரியவற்றைப் பெற்றுக்கொள்கின்றனர், தமது வாழ்கைமுறையை அமைக்கின்றனர்) சமூக ஒழுங்குகள், உறவுகள் (சாதி - குல - மத - இனவழித்தொடர்புகள், திருமணம், பாலியல்-

வரையறைகள், மதபூர்வீகங்கள்) போன்ற இவையனைத்தும் சமூக பண்பாட்டை உருவாக்குகின்றன.[2]

## பண்பாடு தரும் செய்தி

பண்பாட்டில் இரு அம்சங்கள் அடிப்படையானவை: (1) பண்பாட்டு அம்சங்கள் எப்பொழுதும் மாற்றம் முறும்; (2) பண்பாடு வாழ்வின் அடையாளப் பரிமாணம்; இந்த இரண்டாவது கருத்து மாற்றமுறாது. வாழ்வின் அடையாளப் பரிமாணம் என்பது எமது அடையாளத்தை மாறாது அர்த்தப்படுத்துவதோடு எமது அடையாளங்களை மீளவும் உருவகப்படுத்தும் தளமாகும். உலகத்தில் எமக்கு எது அர்த்தமுள்ளது; முக்கியமானது; எமது உறவு எவ்வகையானது என்பன நாமுள்ள பண்பாட்டுக்குழு எமக்குத்தரும் செய்தியாகும். பண்பாட்டுச்செய்தி அக்குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் அறிந்திருக்கவேண்டியவையேயன்றி, குழுவுக்கு வெளியிலுள்ளவர்களுக்கல்ல என்பது முக்கியமானதாகும்[3]

தண்ணீரில் நீந்தும் மீன் அதன் எதிர்வினையை தான் உணராவிட்டாலும் அதன் எதிர்நோக்கில் பாரிய எதிர்வினையை உருவாக்குகிறது. நாம் எமது மனப்பதிவுகளை எப்படிப்பெற்றுக்கொள்கிறோம்; அதை எப்படி விளங்கிக் கொள்கிறோம் என்பதற்கான வரையறையை எமது பண்பாடே தீர்மானிக்கும். எமது மதிப்பீடுகளின் ஆரம்பப் புள்ளியாகவும், செயற்பாட்டுத்தளமாகவும் பண்பாடு அமையும். ஆரம்பப்புள்ளியாக எமது மனப்பதிவு அமையுமிடத்து எமது உறவு ஊடாட்டத்தில் பலத்த எதிர்வினையாகவே செயற்பாட்டு தளம் அமையும்.

---

[2] Beyond Intractability Version II © 2003-2005. The Beyond Intractability Project: Beyond Intractability is a Registered Trademark of the University of Colorado.

[3] Ibid

## மொழியின் அரசியல்

இனம் அல்லது மதம் முரணியின் காரணம் என்பதைவிட மொழி முரணியின் காரணமாக அமைவதற்கு மொழி வெளியரங்கமானதாக இருப்பதே காரணமாகும். இன்று இனம் என்ற எண்ணக்கரு சமூக வரலாற்றுக் காரணங்களுக்கேயன்றி உயிரியல்ரீதியான ஒன்றாக ஆய்வாளர்கள் கருதுவதில்லை என ஷெல் என்ற கனேடிய ஆய்வாளர் கருத்துத் தெரிவிக்கிறார். அரசியல் முரண்கைகளில் மொழியின் பாத்திரம் மிகவும் முக்கியமானதாகும். ஆய்வுத் தரவுகளின்படி உலகமுழுவதும் 6,700 மொழிகள் பேசப்பட்டபோதிலும் கிட்டத்தட்ட 225 மட்டுமே நாடு, இனம், தேசியம் என்ற வரையறைக்குள் அடங்கும். மொழிபேசுவோருக்கிடையில் இறுக்கமான இணைப்புகள், ஒருமைப்பாடுகள், பரவலான ஆதிக்கம் போன்றன நிலவுவதால் தனிமொழியாக்கும் போக்கு அரசியலில் இன்று குறைவுற்றுள்ளதைக் காணலாம். மொழிகளில் கூட பிரதேசவாரி மொழி இன்று தனித்துவத்தைப் பெறுகிறது.

## மனத்தில் உள்ளவை வெளியிடப்பட மொழி தேவை

இன்று முகிழ்ச்சி பெற்றுள்ள பின்நவீனத்துவம் என்ற கருத்தியல் கூட மொழியியல் ஆய்வுப் பின்னணியில் தோற்றம் பெற்றதாகும். 20ம் நூற்றாண்டின் மிகவும் பெயர்பெற்ற மெய்யியலாளர்களான பேட்ரண்ட் ரசல், லுட்விக் விற்கின்ஸ்ரைன், மாட்டின் ஹய்டெக்கர் போன்றோர் மொழி என்பது மனத்தில் (Mind) உள்ள கருத்து (Idea) வெளியிடப்படும் தளம் என்றனர். அதாவது சிந்திப்பது வெளியிடப்படுதல் (Thinking is expressed) ஆகும். இதன் மூலம் அனைத்து மெய்யியல் பிரச்சினைகளையும் மொழியியல் தளத்துக்கு மாற்றம் செய்தனர். அர்த்தமுள்ள சிந்தனையைத் தருவது எது என்னும் வினாவுக்கு பலவழிகளிலும் அவர்கள் விடையளிப்பர். நவீன மொழியியல் மெய்யியலாளர் எனக் கருதப்படும் ஆஸ்திரிய மெய்யியலாளர் விற்கின்ஸ்ரைன் மொழியை செயற்பாட்டுத்தன்மையில் விளக்கினார். மொழியின் அர்த்தத்தை, வடிவத்தைத் தீர்மானிப்பது அதன் செயற்பாட்டுத் தளமே. இதனால் பேச்சு மொழி ஆய்வுத்தளத்தில் முன்னணி பெற்றது. மொழியின் அர்த்தத்தைத் தேடும் முயற்சியில் பிரான்சிய இலக்கியவாதிகள்

அமைப்பியல்வாதத்தை முன்வைத்தனர். மொழியானது பேச்சுமொழி, எழுத்து மொழி எனப் பிரிக்கப்படும். மொழிக்கு செயற்பாட்டுத்தளம் இல்லாவிட்டால் மொழி அழிவுற்றுவிடும்.

## விற்கின்ஸ்ரைனின் மொழி விளையாட்டு

பகுப்பாய்வு மெய்யியல்வாதியான ஆஸ்திரிய மெய்யியலாளர் விற்கின்ஸ்ரைனின் மொழி விளையாட்டு (Language Game) என்ற வரையறைத்திட்டத்தில் மனித மொழியின் வரையறையை கருத்தில் கொள்ளலாம். மொழி விளையாட்டு என்னும் போது சொல் சிலம்பம் என்ற வழமையான அர்த்தத்தை கொள்வது விற்கின்ஸ்ரைனின் மொழி விளையாட்டு என்ற கருத்தாக்கத்தை தவறான புரிதலுக்கு இட்டுச்செல்லலாம்.

மனித ஊடாட்டத்தில் நாளாந்த உரையாடலுக்கு மொழி விளையாட்டே அர்த்தமும், மற்றும் தளம் கொடுப்பதுமாகும். சுட்டப்பட்ட பொருள், கருத்து, வர்க்கம், மற்றும் அர்த்தமுற்ற அனைத்தையும், சுட்டும் குழு உரையாடலில் வடிவமைப்பதே மொழி விளையாட்டாகும் என விற்கின்ஸ்ரைன் வரையறை செய்துள்ளார். உதாரணத்துக்கு நிறம், உணர்ச்சிகள், சட்டம், செயல்பாட்டுத்தளம், வேலைக்குழுக்கள் மற்றும் வர்த்தக அமைப்புகள் அனைத்திலும் மொழி விளையாட்டுகள் உண்டு. சொல்லின் அர்த்தம் என்பது அச்சொல் அல்லது சொற்கட்டமைப்பு எந்தச் சூழலில் என்ன நோக்கத்திற்காக உருவானது என்பதிலேயே தங்கியுள்ளது. விளையாட்டு என்ற கருத்துப்பாடு தொடர்பாடலையும், விளையாடுபவரின் (உரையாடுபவர்) பிரதிபலிப்பையும், செயற்பாட்டையும் குறித்து நிற்கிறது.

## முரண்கைகளின் பண்பாட்டுப் பரிமாணம்

முரண்கைகள் எல்லாச் சமூகத்திலும் உள்ளன. எனவே அதற்கு பண்பாட்டு பரிமாணம் உண்டு. சமூகத்தில் பண்பாடு என்பது ஒரு எளிமையான சொல்லாக இருந்தபோதிலும் பல பாரிய சிக்கல் மிக்க அம்சங்களைக் கொண்டுள்ளது. சமூகத்தின் இருப்புக்கும், ஒழுங்கமைப்புக்கும், பல ஆண்டுகால வளர்ச்சிக்கும், அக-புற

நம்பிக்கைகளின் செயற்பாடுகளுக்கும் பண்பாடே அடிப்படையானது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பண்பாட்டுமையம் தொடர்பாக்கத்தால், கற்றறிந்த மனஎதிர்பார்ப்புள்ள உறுப்பினர்களால் எதிர்காலத்தலை முறைக்கு கையளிப்பு செய்யப்படுகிறது. மொழி, உடை, நடை, உணவு, பழக்க வழக்கங்கள் போன்ற கருத்துக்களைவிட பண்பாடு வேறுபட்டது. பலபண்பாட்டுக் குழுக்கள் ஒரே இன - தேசியத்தைப் பகிர்ந்தபோதிலும், சமூக பொருளாதார வகுப்புவேறுபாடுகள், வித்தியாசமான பாலியல் சார்பு, வித்தியாசமான அரசியல் மத விருப்புக்கள், வித்தியாசமான பேசும்மொழி போன்றவற்றோடு, பரம்பரை வேறுபாடுகளையும் கொண்டிருக்கலாம்.

முரண்கையை நிலைநிறுத்தி வழிப்படுத்தும் விழுமியங்கள், மன நிலைப்பாடுகள், கருத்தாக்கங்கள் போன்றவற்றை இப் பண்பாட்டுப் பரிமாணம் வெளிப்படுத்துகிறது. எம்மைப் பற்றியும் மற்றவர்களைப்பற்றியும் மனப்பதிவுகளை, கண்நோக்குகளை, தீர்ப்புகளைத் தரும் செய்திகளை வடிவமைப்புச்செய்ய, எமது வாழ்விலும், உறவுகளிலும் ஓடும் அடிமட்ட ஆறு போன்றதே பண்பாடாகும். பண்பாடு, முரண்கைகளில் தாக்கம் விளைவிப்பதோடு, எதிர்பாராத முரண்கைத் தீர்வுக்கும் வழிவகுக்கக் கூடிய வலுமிக்கவை என்றாலும் அவை ஆழ்மனத்தினவையாகும் என மிஸெல் லெ பறொன்[4] ‘முரண்கையும் பண்பாடும்’ என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

[4] Michelle Le Baron (Conflict & Culture)

# மனிதனுடைய வன்செயல்களும் அதனால் சூழலில் ஏற்படும் தாக்கமும்

- S. A. ஜெஸ்ரின்

## முதலில்

புவியில் இயற்கையாகவே தோன்றிக் காணப்பட்ட நிலவுருவங்கள், தாவர-விலங்குகள், காலநிலை போன்ற அம்சங்களை உள்ளடக்கியதான நீர்கோளம், வளிகோளம், கற்கோளம், [Hydrosphere, Atmosphere, Lithosphere] என்பவற்றைக் கொண்டதோர் தொகுதியே சூழல் [Environment] எனப்படுகிறது. மனிதனுக்கும் சூழலுக்கும் இடையில் மிக நெருக்கமான தொடர்புகள் காணப்படுகிறன. சூழலுக்கும் தாவர - விலங்கு களுக்குமிடையே காணப்படும் தொடர்பு சூழலில் சமநிலையைத் தோற்றுவிக்கிறது. இச்சமநிலையைப் பொறுத்துத்தான் சூழலினதும் மனிதனதும் நிலைபேறு தங்கியுள்ளது. மனிதன் சூழலை தனது ஆதிக்கத்தினுள் கொண்டுவர முயற்சிகள் மேற்கொண்டதன் விளைவாக சூழல், மனிதன் தொடர்பில் மாற்றங்கள் நிகழலாயின.

சூழல் என்றால் என்ன என்பதை விளக்க பல்வேறு அறிஞர்கள் கருத்துக்களைக் கூறியுள்ளனர். ஒஸ்திரிய புவிச் சரிதவியலாளரான (Geologist) எட்வேட் சுயேசு (Edward Sues) என்பவர் இதனை உயிரின மண்டலம் (Biosphere) எனக் கூறியுள்ளனர். ரஷ்ய நாட்டுப் பொறியியலாளரான (mineralogist) இவளோவிச் வேணாட்ஸ் இக்கருத்துக்களை விருத்தி செய்துள்ளார். பொதுவாக உயிர்வாழ்க்கை நிலைத்திருக்கும் பாகமே உயிரின மண்டலம் என வரையறுக்கப்படுகின்றது. சூழல் எனும்போது நீர் கணிசமான அளவு காணப்படல், சூரியனிலிருந்து பெருமளவு சக்தியைப் பெறல், சடப் பொருளின் திண்ம, திரவ, வாயு நிலைகளிடையே எல்லை காணப்படல் போன்ற அம்சங்களை உள்ளடக்கியிருக்கும்.

சூழலை புவிப்பரப்பின் வெளியோடாக கொள்ளலாம். நிலத்தில் 10 மீற்றர் ஆழமும் பெருங்கடலில் 100-150 மீற்றர் ஆழமும், வளிமண்டலத்தில் 110 மீற்றர் உயரமும் கொண்டதாக இந்தச் சூழல் மண்டலம் காணப்படுகின்றது. ஏறத்தாழ 300,000 பச்சைத்தாவர இனங்களையும் 1,300,000 விலங்குகளையும் எண்ணற்ற பற்றீரிய பங்கசு இனங்களையும் உள்ளடக்கியுள்ளது. இவ்வாறு நீர்க்கோளம், கற்கோளம், வளிக்கோளம் என்பவற்றை உள்ளடக்கியதாகவும் இம்மூன்றிலும் உயிரினங்களின் செறிவு பரம்பியுள்ளதாகவும் சூழல் தொகுதி அமைவு பெறுகின்றது. பொதுவாக புவிமேற்பரப்பில் மனிதனைச் சூழ்ந்து காணப்படும் அம்சங்களின் மொத்த நிலைமைகளே சூழல் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறாக எம்மைச் சூழக் காணப்படும் சூழலை மனிதன் பல்வேறு பட்ட தாக்கங்களுக்கு உட்படுத்துவது, இன்று வழமையான செயற்பாடாக மாறிவிட்டது. மனிதன் சூழலை அழிவுக்கு உட்படுத்துவதற்கான காரணம் என்ன என்பதை சற்று மெய்யியல் ரீதியாக ஆராய்வோம்.

## மனிதன் சூழலை மாசு படுத்துவதற்கான மெய்யியல் காரணங்கள்

'மனித சமுதாயத்தில் சமத்துவம் என்பது காணப்பட முடியாது. ஏனெனில் சில மனிதர்கள் அதீத மனிதர்களாய் மாற முடியும்' என்று ஃபிரடரிக் நீட்சே (1810-1900) என்ற ஜேர்மனிய மெய்யியலாளர் கூறுவார். இவரோடு இணைந்த பின் நவீனத்துவ வாதிகளும் மானிட சமத்துவம் என்ற கூற்றை அறவே புறக்கணித்தார்கள். இவர்களுடைய இவ்வாறான கூற்றுக்கள் பல்வேறு துறைகளிலும் அசுர வளர்ச்சியைக்காட்டி வரும் மனுக்குலத்தின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக அமைந்துள்ளது என்பது மறுக்கமுடியாத ஓர் உண்மை. அத்துடன் நீட்சேயின் கூற்றான 'கடவுள் இறப்பு' என்ற கருத்து மனிதர்களுடைய செயற்பாடுகளை துரிதப்படுத்துவதாகவும், பிறர் நலனில் அக்கறையின்றி வாழ்கின்ற தன்மையையும் ஆக்கியுள்ளது. இன்று மனிதரின் ஒவ்வொரு செயற்பாடும் (அது விஞ்ஞானரீதியாக இருக்கலாம் - அல்லது சாதாரண செயற்பாடாக

இருக்கலாம்) அனைத்தும் மற்ற மனிதரை பாதிப்புக்கு உட்படுத்துகின்ற ஒன்றாகவே விளங்குகின்றது. இன்று மனிதன் தனக்கு அயலவனை 'நரகம்' எனறே நினைக்கின்றான். இதன் விளைவாக மற்றைய மனிதனுடைய சுதந்திரமான வாழ்க்கையை தான் கைப்பற்ற விளைகின்றான். இதனால் சுதந்திரம் பறிக்கப்படும் மனிதன் யாருமே நினைத்துப் பார்க்க முடியாத ஓர் யதார்த்த மற்றவாழ்வுக்குள் தள்ளப் படுகின்றான். இதன் விளைவாக இன்று நாம் பல எதிர்வினைகளை எதிர் நோக்க வேண்டியவர்களாக உள்ளோம். இன்று மனிதர்களுக்கிடையே காணப்படும் ஏக்கம், இல்லாமை, மாயை போன்ற சிந்தனைகள் இவற்றின் விளைவுகளே. இவைகள் தான் இன்றைய மனித செயற்பாடுகள் அனைத்திலும் இழையோடி உள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. அது நவீன கண்டு பிடிப்பாக இருந்தால் என்ன, சூழலை மாசுபடுத்துவதாக இருந்தால் என்ன, சமாதானத்திற்கான போராக இருந்தால் என்ன, அனைத்துமே மனிதனின் வரட்டுத்தனமான சுயநலப் போக்கையும் பிறர் நல மறுப்பையும் கோடிட்டு காட்டுபவைகளாகத் திகழ்கின்றன.

## மனிதன் சூழலை கட்டுப்படுத்தல்

இச் சந்தர்ப்பத்திலே எவ்வாறு மனிதன் இயற்கையை தனது செயற்பாட்டினால் கட்டுப்படுத்துகின்றான் என்பதை சற்று ஆராய்வோம். மனிதன் தனது சிந்தனைத் திறனால் காலநிலை நிகழ்வுகள் பற்றி அறியவும், காலநிலையின் மாறுபாட்டை விளங்கவும் முடிகின்றது. புயல், வெள்ளப் பெருக்கு போன்ற நிகழ்வுகளை முன்கூட்டியே எதிர்வு கூற மனிதன் வளர்ந்து விட்டான். அத்துடன் பெரும் சூறாவளிகளின் கண் பகுதிகளை நெருங்கி அதன் மீது குண்டுகளை வெடிக்க வைத்து சூறாவளியின் தாக்கத்தை குறைக்கும் நிலைக்கு வளர்ந்து விட்டான். பனிக்கட்டிப் பகுதிகளில் பனியை உருக்கி ஓடவைத்து விட்டு அங்கு தன் நடவடிக்கைகளை மேற்கொள்ள முயல்கின்றான். கொங்கோ, அமேசன் காடுகள் படிப்படியாக பல நவீன கருவிகளின் உதவியுடன் அழிக்கப்பட்டு வருகின்றன. வெப்ப வலய, இடை வெப்பவலய காடுகள், மனிதனால்

குடியிருப்புக்களுக்காகவும், பயிர்செய் நிலத்திற்காகவும், ஏனைய தேவைகளுக்காகவும் அழிக்கப்பட்டு வருகின்றன. வளமற்ற மண்ணை வளமுள்ளதாக மாற்றப் பல செயற்கை உரங்கள் பயன்படுத்தப் படுகின்றன. அத்துடன் மண்ணை அகழ்ந்துசென்று பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதையும் காணக்கூடியதாக உள்ளது.

## மனித செயற்பாடுகளால் ஏற்படும் தீய விளைவுகள்

யுத்தத்தின் வெடிஓசைகளும், குண்டுத் தாக்குதல்களும் மனிதனை உலகளாவிய ரீதியில் பயத்தில் ஆழ்த்திய காலம் மாறி, இயற்கையும், இயற்கையின் கோரத்தாண்டவங்களும் இன்று மனிதனை ஆட்டி வைக்கின்றன. மனிதனால் மனிதன் கொல்லப்பட்ட காலம் மாறி இயற்கையே தனது பிள்ளைகளைப் பலியெடுக்கும் நிலைமை தலை தூக்கியுள்ளது. இத்தகைய இயற்கையின் மூர்க்கத்தினால் உறங்கியுள்ள எரிமலைகளும் மீளுயிர்ப்புப் பெறுகின்றன. இதனால் நாம் சந்திக்கின்ற பெரிய சவால் இயற்கையில் அதிகரித்துள்ள வெப்பநிலையாகும். இதற்கு முக்கிய பங்கினை வகிப்பது இயந்திரத் தொழில் வளத்தால் அபிவிருத்தி அடைந்த நாடுகளே என்றால் அது மிகையாகாது. குறிப்பாக மனித செயற்பாட்டின் காரணமாக வெளியேற்றப்படும் காபனீரொட்சைட்டின் ஐந்தில் ஒரு பகுதி பல்வேறு தொழிற்சாலைகளை தன்னகத்தே கொண்டுள்ள அமெரிக்காவுக்கு சொந்தமானது என்றால் அது மிகப் பொருந்தும்.

இதனால் பூமியின் வெப்பநிலையில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கிவிட்டன, புவித்துருவங்களில் பனிக்கட்டிகள் உருகத் தொடங்கி விட்டன. மழை வீழ்ச்சியில் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கி விட்டன. சூறாவளி, புயற்காற்று, மோசமான வெப்ப அலைகள் ஆகியன ஏற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு நிலத்தடி எரிபொருள் படிமங்களின் அதிகரித்த பாவனை, காடுகளை அழித்தல் என்பன முக்கிய பங்கினை வகிக்கின்றது.

வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் நஞ்சேறிக் கிடக்கின்றது. ஓசோன் படையில் பாரிய துவாரங்கள். பயங்கர ஊதாக் கதிர் வீச்சு பூமியை நேராக வந்தடைகின்றது. பூகோள வெப்பம் உயர்வடைந்து சிறிய தீவுகள் கொள்ளை போகின்றன. புதிய புதிய நோய்கள் மனிதகுலத்தைப் பீடித்து ஆட்டுகின்றன. இவை எல்லாம் மனிதனுடைய செயற்பாட்டால் ஏற்பட்ட விளைவுகள் எனக் கூறலாம்.

## சூழலில் ஏற்படும் பயங்கர மாற்றங்கள்

சூழல் சமநிலைப்பிறழ்வின் காரணமாக ஏற்பட்ட பயங்கர காலநிலை மாற்றம், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக பூமியை கபளீகரம் செய்தநிலை (Ice Age) மீளவும் தோன்றலாம் என்ற உண்மை நிலையை விஞ்ஞானிகள் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சமீபத்தில் சமுத்திரங்களின் மேற்பரப்பில் பரவலாக ஒருகோடி எண்ணிக்கையான மையங்களின் வெப்பநிலையை அளந்து பரீட்சித்துப் பார்த்த பின் ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள். கடந்த 40 வருடங்களில் சராசரி வெப்பம் உயர்ந்திருப்பதாகவும், 800 அடி ஆழத்தில் கூட இந்த வெப்ப உயர்வு ஊடுருவியிருக்கிறதாகவும் திடுக்கிடும் தகவலை வெளியிட்டனர். இது மட்டும் இல்லாமல் பெரிய பயங்கரம் எதுவெனில் கடல் சுழியோட்டங்கள் குழம்புவதாகும். வெப்ப நாடுகளிலிருந்து வெப்பத்தை குளிர் நாடுகளுக்கும், அங்கிருந்து குளிரை வெப்ப வலய தேசங்களுக்கும் காவிச்சென்று புவியின் தட்ப வெப்ப நிலையை சமன் செய்கின்ற சுழிச்சுற்றோட்டத்தை புவியில் ஏற்பட்டுள்ள வெப்பம் குழப்புவதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் துருவப் பனிமலைகள் உருகி கடல் மட்டம் உயருவதனால் கண்டங்கள், தீவுகள் பலவும் கடலில் முழ்கி இருந்த சுவடே இல்லாமல் போய்விடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மேலும் போருக்காகவும், போரினாலும் பல அடர்ந்த காட்டுப்பகுதிகளும், வனவிலங்குகளும் அழிக்கப்படுகின்றன. இதனால் சூழலில் ஏற்படும் பாரிய பக்க விளைவுகளில் ஒன்று

தான் 'பச்சை வீட்டு விளைவு' ஆகும. தாவர ஒளிச்சேர்க்கையின் போது வளிமண்டலத்திலுள்ள காபனீரொட்சைட்டிலுள்ள காபன் மூலக்கூறுகள் தாவரப் பதார்த்தத்துடன் இணைக்கப்படுவதால் வளிமண்டலத்திலுள்ள காபனீரொட்சைட்டின் அளவு குறைக்கப்படுகின்றது. ஆகவே அதிகளவு காடுகள் இருப்பின் காட்டு மரங்கள் வளிமண்டலத்திலுள்ள காபனீரொட்சைட்டின் குறிப்பிடத்தக்க பகுதியை எடுத்துக் கொள்ளும். அது மட்டுமல்லாது காடுகளை எரிப்பதன் மூலம் காபனீரொட்சைட் வெளியிடப்படுவதால் 'பச்சை வீட்டு வாயுக்கள்' (Green House Gases) அதிகரிக்கின்றன.

தென் கிழக்கு ஆசியாவிலேயே உலகின் ஏனைய பகுதிகளிலும் பார்க்க மிக வேகமாக காடழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையில் 1950 களில் 50-60 வீதமான பகுதி காடுகளாக இருந்தது. 1980 களில் இது 25 வீதமாக குறைந்தது. குறிப்பாக எமது நாட்டின் போர் பாரிய அளவில் இயற்கையை சேதமாக்கியது. இன்றும் கூட எமது பகுதிகளில் காணப்படும் தலையை இழந்த பல மரங்கள் இதற்குச் சான்றாகும். மேலும் மிதிவெடிகளினால் மண்வளமானது பலத்த பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளது. இன்று எமது பிரதேசங்களில் பாரிய அளவிலான பகுதிகள் மிதிவெடி நிறைந்த பகுதிகளாக காணப்படுகின்றன. அத்துடன் மட்டுமல்லாமல் பல சக்தி வாய்ந்த குண்டுகள் எமது பிரதேசத்தில் கூடியளவு வெடிக்க வைக்கப்பட்டுள்ளன. இவை மனிதர்களை மட்டுமன்றி விலங்குகளையும், தாவரங்களையும் அடியோடு சாகடிக்கின்ற ஒரு கொடிய நிகழ்வாகும். சர்வதேச ரீதியாக நோக்குமிடத்து அணுகுண்டு பரிசோதனையானது, பாரிய சமுத்திரங்களிலே நடாத்தப்படுகின்றன. இதனால் அங்கு வாழும் கடல் உயிரினங்கள், தாவரங்கள் இயற்கை நீர் ஓட்டங்கள் என்பன பாரிய குழப்பத்திற்கும், அழிவுக்கும் உள்ளாகின்றன. இதன் தாக்கம் உடனே வெளிப்படாமல் இருந்தாலும் காலப்போக்கில் கடல் நீர் அடியில் பூகம்பம் போன்ற பாரிய அழிவினைத் தரக்கூடிய நிகழ்வுகள் ஏற்பட வாய்ப்பாக அமைந்துள்ளன. 2004

மார்கழி 26 ஏற்பட்ட 'சுனாமி' இதன் ஒரு விளைவாகவே கணிக்கப்படுகின்றது. பூமியில் தனது ஈடுபாட்டினால் பல குழப்பங்களை ஏற்படுத்திய மனிதன் இன்றைய காலத்தில் விண்வெளிக்கும் சென்று பல ஆய்வுகளின் மூலம் வளிமண்டலத்தை மாசு படுத்துவதிலும், வளிமண்டலத்திலுள்ள காபனீரொட்சைட்டின் செறிவை அதிகரிக்க வைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றான். ஒவ்வொரு வருடமும் உலகத்தின் ஏதாவது ஒரு பகுதியிலிருந்து விண்கலங்கள் வான்வெளிக்கு அனுப்பப்பட்டவாறே உள்ளன. இவை அனுப்பப்படுவதில் பல நோக்கங்கள் இருந்தாலும் அவை எல்லாம் சூழலை ஒரு வகையில் மாசு படுத்துகின்றன. மனுக்குலத்தின் அழிவைத் தீர்மானிக்கின்ற, பூமியின் ஆயுளைக் குறைக்கின்ற ஒரு நிகழ்வாகவே கணிக்கப்படுகின்றன. மனிதன் தன்னை அறியாமலே தனது வீரச் செயற்பாடுகளின் மூலமும், நவீன கண்டுபிடிப்பின் மூலமும், தனது அழிவைத் தானே தீர்மானிக்கின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளான் என்றால் அது மிகையாகாது.

## சூழலில் மனித செயற்பாட்டினால் ஏற்படுகின்ற தாக்கத்தைக் குறைக்க அவன் கையாண்ட ஓர் சில வழிமுறைகள்

காலப்போக்கில் தனது சொந்த செயற்பாட்டினால் சூழலில் ஏற்பட்ட மாற்றத்தையும், அதன் விளைவுகளையும் ஓர் அளவுக்கு உணர்ந்த மனிதன், அதற்கான மாற்றுவழிகளையும் பற்றிச்சிந்திக்க முனைந்து வருகிறான். குறிப்பாக செயற்கைக் காடுகளை வளர்த்தல், வாகனத்திற்கு டீசல் பெற்றோல் போன்ற கனிப்பொருட்களுக்கு பதிலாக சூழலை எந்த வித பாதிப்பிற்கும் உள்ளாக்காத வாயுக்களைப் பயன்படுத்துதல், காற்றின் விசையை பயன்படுத்தி கடலில் கப்பல் செலுத்துதல், இயற்கை நீர்ச்சாரலில் இருந்து மின்சாரம் பெறுதல் - வாகனங்களை இயக்குதல் போன்ற மாற்றுவழிகளையும் மனிதன் சிந்தித்துள்ள போதிலும் முற்று முழுதாக முழுமனுக்குலமுமே அவற்றைப் பயன்படுத்தக்கூடிய விதத்தில் நடவடிக்கை எடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளான். மனிதன் எப்போதுமே இயற்கையால் தான்

ஆழப்படுவதைவிட, தன்னால் இயற்கை ஆழப்படுவதையே விரும்புபவனாகக் காணப்படுகின்றான். இதனால் இயல்பாகவே இயற்கையினால் தண்டிக்கப்படுகிறவனாக காணப்படுகின்றான்.

1997ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜப்பான் கைற்றோவில் நடந்த மாநாட்டில் சர்வதேச நாடுகளிடையே ஓர் ஒப்பந்தம் உருவாகியது. 2012ம் ஆண்டளவில் 1990ம் ஆண்டிலிருந்த பச்சை இல்ல வாயுக்கள் வெளியகற்றும் வீதத்தை 5.2 வீதத்தால் குறைப்பதென நாடுகளிடையே ஒப்பந்தம் உருவாகியது.

இவர்களது நோக்கம் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்காது கூட்டு முயற்சி மூலமும், தொழில் நுட்பம் மூலமும் வளிமண்டலத்தின் பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்தலாகும். மழைக்காடுகள் நாடுகளின் பணிப்பாளர் கெவின் கொன்றாட் (Kevin Conrad) ஊக்குவிப்பு வெகுமதி அளிப்பதன் மூலம் வெப்பவலயக் காடழிப்பு வேகத்தைக் குறைக்கலாம் என வாதிடுகின்றார். பப்புவா நியூகினி அரசாங்கம் காடுகளைப் பாதுகாக்கும் வளர்முக நாடுகளுக்கு ஊக்குவிப்பு வெகுமானம் அளிக்கும் திட்டமொன்றை முன்வைத்தது. இத் திட்டங்கள் அனைத்திலும் எல்லா நாடுகளும் தங்களை முழுமையாக இணைத்துக் கொள்ளுமட்டும், சூழலில் ஏற்படும் பாரிய அழிவுகளையும், மாற்றங்களையும் எல்லோருமே பொறுப்பு எடுக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம்.

## முடிவாக

இப்பிரச்சினைகளுக்கு வெளிப்படையாகத் தெரியக்கூடிய தீர்வு, நிலத்தடியில் புதைந்து கிடக்கும் எரி பொருள் படிமங்களை உபயோகிப்பதை நிறுத்திவிட்டு காற்று, சூரியன், நீர், ஐதரசன் போன்ற தூய சக்தி முதல்களை (Clean Energy Source) உபயோகப்படுத்துவதாகும். வினைத்திறன் மிக்க எரிபொருள் அற்ற வாகனங்களின் உபயோகத்தை ஊக்குவித்தல், நிலக்கரியை எரிப்பதால் வெளிவிடப்படும் காபனீரொட்சைட்டை நிலத்தினடியிலேயே

(வளிமண்டலத்திற்கு செல்லவிடாது) சேமித்து வைத்தல், காடுகளை வளர்த்தல், காடுகள் அழிப்பதைக் கட்டுப்படுத்தல் என்பனவே சில இடைக்காலத் தீர்வுகளாக அமையமுடியும். அத்துடன் சூழல் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் மாநாடுகளை மக்கள் மத்தியில் நடாத்துதல், அதிகளவு செயற்கை உரம் பாவிப்பதை தவிர்த்தல், இயற்கை உரங்களைப் பாவிக்க வேண்டிய முறையை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தல் என்பனவும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். சூழல் என்பது மனிதனுடைய நெருங்கிய நண்பன். அவன் எப்போதும் மனிதனுக்கு நன்மை செய்வதிலேயே தன் முழுக்கவனத்தையும் செலுத்துவான். ஆனால் மனிதன் எப்போது சூழலுக்கு எதிராகச் செயற்படுகின்றானோ, அப்போது சூழலும் மனிதனுக்கு எதிராக செயற்பட ஆரம்பித்து விடுவான் (If you kill the nature, nature will kill you).


**துணைநின்ற நூல்கள்:**

1.KARL FREDRICH SCHREIBER, *The Originals of Eco System and Effects of Human Intervention (Applied Geography and Development)*, Vol. 19, 1982.

2.சூழல் முகாமைத்துவம் பற்றிய சில அம்சங்கள் - மார்க்கம் 2,3,1992.

3.மனிதனும் அவனது சூழ்நிலையும் - யுனெஸ்கோ கூரியர் - 1997.

4.உயிர்ச்சூழல் ஒழுங்குகளும் பிரதேச அபிவிருத்தி நடை முறைகளும் - யாழ்ப்பாண புவியியலாளன், 4, 1986/87.


எந்த செயலையும், அதற்குரிய காலத்திலேயே செய்ய வேண்டும்.

-அவ்வையார்.

பொறுமையே உயர்ந்த தவமாகும்.

-குருநானக்.

# வன்முறையியலின் மானிடவியல்

- யோ. போல் றொகான்

"மனிதன் என்பவன் ஒரு போரிடும் விலங்கு. மனிதன் இயல்பிலேயே போர்க்குணமிக்கவன்" என்ற தோமஸ் ஹொப்ஸின் அறிவிப்போடு வன்முறை நோக்கில் மானிடவியல் படிக்கப்படுகின்ற தன்மை தோற்றம் பெற்றது எனலாம். இன்று உலக நாடுகள் முழுவதையும் வியாபித்து நிற்கும் வன்முறையும், அதன் வெளிப்பாடுகளான சிறிய பெரிய போர்களும், பயங்கரவாத குற்றச்செயல்களும், "வன்முறை மனிதன்" (Homo Violens) பற்றிய தீர்க்கமான ஆராய்வுகளையும், கற்கைகளையும் வேண்டி நிற்கின்றன.

மெய்யியல் ரீதியிலான மானிடவியல் கற்கைநெறி கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்கு முன்புதான் ஆரம்பித்தது. மெய்யியல் ரீதியாக மனிதனை ஆராய்பவர்கள் மனிதனை ஒரு "மறை பொருள்" என்றும், "நிகழ முடியாத நிகழ்தகவு" என்றும் முடிவு செய்வார்கள். இப் பிரபஞ்சத்தில் பல புதிர்களை மனிதன் எதிர் கொண்டுள்ளான். சில புதிர்களை விடுவித்துள்ளான். பலவற்றை வெற்றிகொள்ளும் தருவாயில் உள்ளான். ஆனால் மனிதனே ஒரு மாபெரும் புதிர். இந்த மனிதன் என்னும் புதிரை எப்போ மனிதன் எதிர் கொள்ளுகின்றானோ, அப்போது அவன் நிச்சயம் மலைத்துப்போய் நிற்பான் என்று அஸிமோவ் (Asimov) என்கிற மானிடவியலாளர் கூறுவார்.

இவ்வாறு மாபெரும் புதிராக, மறைபொருளாக இருக்கிற மனிதனை, அவனது வளர்ச்சிப் பரிணாம ஒழுங்கில் பல பெயர்களில் அழைக்கின்ற தன்மை மெய்யியலாளர்களால் முன் வைக்கப்பட்டது; இந்தப் பின்னணியிலே தான் "வாழும் மனிதன்" (Homo Vivens), "அறியும் மனிதன்" (Homo Sapiens), "சுதந்திர மனிதன்" (Homo Volens), "மொழி பேசும் மனிதன்" (Homo

loquens), "கலாச்சார மனிதன்" (Homo culturalis), "உழைக்கும் மனிதன்" (Homo laboris), "சமூக மனிதன்" (Homo socialis), "பொருண்மிய மனிதன்" (Homo economicus), போன்ற பெயர்களைக் கொடுத்து மனிதன் என்னும் புதிருக்குரிய விடைகளைக் கண்டறிய முயன்றுள்ளனர். மேற்கூறப்பட்ட மனிதருக்குரிய அடைமொழிகளான வாழ்தல், அறிதல், சுதந்திரமாகச் செயலாற்றுதல், மொழியைப் பாவித்தல், சமூக, கலாச்சார செயற்பாடுகள், பொருண்மிய செயற்பாடுகள் எல்லாமே மனித செயற்பாடுகள் என்றும், அவைகள் மனிதன் என்னும் மறை பொருளுக்குள் எட்டிப்பார்க்க எமக்குக் கிடைத்த யன்னல்கள் என்றும் மொன்டின் (Mondin) அழைப்பார். உண்மையிலேயே, மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் மூலமாகத்தான் மனிதன் தன்னை வெளிப்படுத்துகிறான். தன் சகபாடிகளுடன் (Pears) உறவு கொள்கிறான். பிரபஞ்சத்தில் தன்னிருப்பை உறுதி செய்கிறான்.

மேற்கூறப்பட்ட செயற்பாடுகளுக்குள் வன்முறையையும் உட்படுத்த வேண்டும் என்றும் "வன்முறை மனிதன்" என்ற எண்ணக்கருவை வளர்க்க வேண்டுமென்றும் பலராலும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. றெனால்ட் நீபூர் (Reinhold Niebuhr) எரிக் வைல் (Eric Weil) போன்றோர் இது பற்றிப் பரந்த ரீதியில் ஆராய்ந்துள்ளனர். இதற்கு எதிராக சிலர் "சுதந்திர மனிதன்" என்ற கருத்துக்குள்ளேயே "வன்முறை மனிதன்" இருக்கிறான்.

சுதந்திரத்துக்கான மனித செயலாற்றல் தான் வன்முறை என்று வாதிடுகின்றனர். வேறு சிலர் "விலங்கு மனிதன்" (Homo animalis) தான் "வன்முறை மனிதன்" என்ற பின்னணியில் இருக்கிறான் என்று வாதிடுகின்றனர். ஆனாலும் உலகின் வளர்ந்து வரும் வன்முறைக் கலாச்சாரத்தின் பின்னணியில் "வன்முறை மனிதன்" தனியாகப் பிரித்து நோக்கப்படுவது தற்கால மனிதனைப் பற்றிய புரிதல்களுக்கு அவசியமானது. தற்கால மானிடவியல் மிக அவசியமாகக் கோரி நிற்பதுமாகும்.

## "போரிடும் விலங்கு"

அரிஸ்டோட்டில் முதல் தடவையாக விலங்கு என்ற நிலையில் இருந்த மானிடத்திற்கு, மானிடத்தின் இன்றியமையாத பண்பாகிய பகுத்தறிவை மையமாக வைத்து பல அடைமொழிகளைக் கொடுத்தார். இதன் பலனாக மனிதன் பற்றிய பல வரையறுப்புக்கள் தோன்றின. "மனிதன் ஒரு சிந்திக்கும் விலங்கு", "மனிதன் ஒரு சமுகவிலங்கு", "மனிதன் ஒரு அரசியல் விலங்கு" போன்ற பிரசித்தமான வரையறுப்புகளுக்கு அரிஸ்டோட்டில் சொந்தக் காரனானார்.

மனிதனது போர்க்குணத்தைச் சிலாகித்துப் பேசிய சில கிரேக்க - உரோமைய அறிஞர்களை நாம் மெய்யியல் வரலாற்றில் சந்தித்தாலும் போரிடும் விலங்காக வரையறை செய்யும் தன்மை நவீன காலத்தில் தான் தோன்றியது. சிசரோ, மார்கஸ் அவுரேலியுஸ் போன்ற ஸ்தொயிக்க அறிஞர்கள் மனிதனது விலங்குக்குணமே அனைத்து வன்முறைப் போக்குகளுக்கும் காரணம் என்றுகூறி, இந்த விலங்குக் குணத்தைக் கட்டுப் பாட்டுக்குள் வைப்பதன் மூலமாக அறநெறியில் உயரலாம் என்று கூறினர். ஆனால் மனிதனது வன்முறைக் குணத்தைத் தனியே பகுத்து நோக்கும் தன்மை நவீன காலம் வரை இருக்கவில்லை.

## லேவியத்தான் (Leviathan) - இராட்சதச் சுறா

மனிதரது ஒருத்தரை ஒருத்தர் பிடித்து விழுங்கும் தன்மையைக் காட்ட "இராட்சதச் சுறா" (Leviathan) என்கிற உருவத்தைக் கையாளும் தோமஸ் ஹொப்ஸ் (1588-1679) மனிதனது சமூக, அரசியல் அடாவடித்தன இயல்பைக் காட்ட எழுதிய தனது நூலுக்கும் அதே 'லேவியத்தான்' என்ற பெயரையே இட்டார். தோமஸ் ஹொப்ஸ் மனிதரது இயல்பிலேயே அடிப்படையான ஒரு சமநிலையைக் காண்கிறார். இந்த அடிப்படையான சமநிலை மனிதரது உடல், மன, ஆற்றல், ஆசை, நம்பிக்கை போன்றவற்றில் காணப்படுகிறது. இந்த அடிப்படைச்

சமநிலைத் தன்மையே மனிதருக்கிடையிலான அனைத்துப் பிணக்குகளுக்கும், துன்பியல் நிகழ்வுகளுக்கும் காரணமாகும். உதாரணமாக ஒரு பொருளைத் தமதாக்குவதற்கு பல மனிதருக்கு உரிமையும், ஆசையும், வசதியும் உண்டு. ஆனால் ஒரே பொருளை எல்லாரும் தமதாக்க முடியாது. ஆகவே எல்லாரும் தமக்குள் அடிபட்டு, இரத்தம் சிந்தி, எந்த 'வல்லவன்' வெற்றியடைகிறானோ, அந்த வல்லவன் கையில் அப்பொருள் சென்றடைகிறது.

தோமஸ் ஹொப்ஸ், மனிதரது சமூக வாழ்வுக்கு முன்னர் இயற்கைச் சூழலோடு ஒத்த இன்னோர் வாழ்வு இருந்தது என்றும், இந்த வாழ்வு பலாத்காரம் நிறைந்ததாக -"ஒருவரையொருவர் பிடித்து விழுங்கும்" தன்மையுடையதாக - "ஒவ்வொரு மனிதரும் மற்றவருக்கெதிராக" என்ற சுலோகமுள்ளதாக இருந்ததென்றும் கூறுகிறார். இத்தகைய இயற்கை நிலை வாழ்வில் இருந்த பலாத்கார நிலைக்குப் பரிகாரமாக - அதைத் தவிர்ப்பதற்காகவே மனிதர்கள் ஒன்று கூடி தமக்குள் ஒரு சமூக ஒப்பந்தத்தைச் செய்து சமூக - அரசியல் வாழ்வைத் தோற்றுவித்தார்கள். ஆகவே தோமஸ் ஹொப்சின் கருத்துப்படி மனிதரது பின்னைய சமூக வாழ்வு பலத்காரம் நிறைந்ததல்ல. முன்னர் நிலவிய பலாத்கார வாழ்விற்கான பரிகாரமே. ஆகவே அரிஸ்டோட்டில் போன்றோர் கண்ட மனிதரது அடிப்படையான சமூக இயல்பு தோமஸ் ஹொப்சினால் வன்முறைக்கான பரிகாரமாகக் காட்டப்படுகிறது. தொடர்ந்த வன்முறைப் போக்கும் அச்சமும், சாவுச் சூழ்நிலையும், தனிமையும், ஏழ்மையும், இழிவுத்தன்மையும் நிறைந்த வன்முறை வாழ்வே மனிதருக்கு அடிப்படையில் இருந்தது. இந்நிலையை மாற்றவே மக்கள் ஒன்றுகூடி 'வல்லவன்' ஒருவனிடம் தங்கள் இறைமையைக் கையளித்து சமூக வாழ்வை வாழக்கற்றுக் கொண்டார்கள். இவ்வாறு தோமஸ் ஹொப்ஸ் அடிப்படையிலேயே ஒரு வன்முறை மனிதனையே இனங்காண்கிறார்.

## "மக்களின் தலைவன்" - "போரினதும் வன்முறையினதும் தலைவன்"

மேற்கில் நிக்கொலோ மாக்கியவெல்லியும் (1469-1527) கிழக்கில் கௌடில்யனும் (கி. மு. 4ம் நூற்றாண்டு) வெவ்வேறு காலத்தவராயினும் ஒரே மாதிரியான அரசியல் சிந்தனைகளைக் கொண்டிருந்தனர். மாக்கியவெல்லியின் "இளவரசன்" (The Prince) எனும் நூலும், கௌடில்யனின் "அர்த்த சாஸ்திரம்" (The Treatise on Government) எனும் நூலும் ஒரே மையக் கருத்தை ஒரே வகையில் சொல்கின்ற இரண்டு நூல்களாகும்.

மாக்கியவெல்லி, மக்களின் தலைவனை போர்புரிகின்றவனாக, எப்போதும் போரைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பவனாக, அனைத்திற்கும் மேலாக போருக்கும், அதன் தயாரிப்புக்கும் முன்னுரிமை கொடுப்பவனாகக் காட்டுகிறார்.

மாக்கியவெல்லி கூறும் மக்களின் தலைவன் சிங்கத்திற்கும், நரிக்கும் ஒப்பிடப்பட்டுள்ளான். ஓர் அரசன் ஒரே நேரத்தில் சிங்கம் போலவும், நரி போலவும் செயற்பட வேண்டும். சிங்கம் வன்முறையின் - போரின் அடையாளம். நரி தந்திரத்தின் - சூழ்ச்சியின் - பகைகளை ஏமாற்றி அழிப்பதன் அடையாளம். ஆகவே மாக்கியவெல்லி மக்களின் தலைவனை வன்முறையாளனாக, கொலை செய்வதற்கும், ஏமாற்றுவதற்கும், கஞ்சத்தனமாக இருப்பதற்கும் பின்னிற்காதவனாக, பயத்தைக் காட்டி மக்களை அடக்கியாள்பவனாக, தனக்கு அஞ்சாத தன் குடிமக்களையும் வெட்டிவீழ்த்த அஞ்சாதவனாக - மொத்தத்தில் வன்முறையின் உறைவிடமாகக் காண்கிறார். மக்களிடமிருந்தே அரசன் தோன்றுவதால், அரசனின் வழியிலேயே குடிமக்களும் செல்வார்கள் என்பதால் மாக்கியவெல்லி காணும் மானிட சமுதாயம் முழுவதுமே வன்முறையுள்ளதாய் இருப்பதில் வியப்பில்லை. ஒவ்வொரு சமுதாயமும் வன்முறையுள்ளதாய் இருப்பதால்தான், ஒன்றிலிருந்து இன்னொன்று தப்புவதற்கு, அவைகள் கூடிய வன்முறைகளைப் பயின்று பிரயோகிக்கின்றன.

மேலும் மாக்கியவெல்லி மக்களிடமிருந்து பிறந்த அரசாங்கத்தை வர்ணிக்கையில் "அரசாங்கம் என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட வன்முறை" (Government is an organized form of violence) என்கிறார். மக்களிடமிருந்த ஒழுங்குபடுத்தப்படாத, காட்டுமிராண்டித் தனமான வன்முறையே, அரசாங்கத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டதாக, சட்டதிட்டத்திற்குட்பட்டதாக மாறியது. எங்கேயிருந்தாலும், எப்படியிருந்தாலும் வன்முறையே மக்களின் அடிப்படை இயல்பாகக் காட்டப்படுகிறது.

கௌடில்யனும் இப்படிப்பட்ட சூழ்ச்சி நிறைந்த, வன்முறைமிக்க, போருக்குப் பின்னிற்காத மக்களின் தலைவனையே அர்த்தசாஸ்திரத்தில் முன்வைக்கிறார். "அரசன் தன்னுடைய செல்வத்தையும், அதிகாரத்தையும் பெருக்குவதற்கு சாத்தியமான எல்லா வழிகளையும் கையாளலாம். சிறப்பு ஒன்றை அடைய இறப்புக்கள் தவிர்க்கப்பட முடியாததாயின் அவை நியாயப்படுத்தப்பட்ட கொள்கைகள்" ஆகும். "நோக்கு சிறந்ததாயின் அடையும் வழி பற்றி அஞ்ச அல்லது அக்கறைப்படத் தேவையில்லை" என்கிறார். அரசனது அதிகாரத்தை வலுப்படுத்த சிறந்த படை பலமும், பண பலமும் இன்றியமையாதவை என்கிறார். இவற்றை அடைவதற்குத் தர்ம நீதிக்குப் புறம்பான வன்முறை வழிகளையும் கையாளலாம் என்கிறார். மேலும் அரசியல் கொலை ஒரு சடங்கு முறையாகும். சமுதாயத்தில் பல சடங்கு முறைகள் போல அரசியலில், அரசியல் சார்பான கொலை ஒரு சடங்கேயன்றி வேறல்ல. நீதி, நேர்மை, நியாயம் பார்க்கும் இளகிய மனமுள்ள அரசன் இலகுவில் பகைவர்களிடம் தன் உயிரை ஒப்படைத்துவிடுவான். ஆகவே அவன் எப்போதும் அஞ்சத்தக்கவனாகவும், வன்முறை மிக்கவனாகவும் இருக்கவேண்டும் என்கிறார் கௌடில்யன்.

மொத்தத்தில் மாக்கியவெல்லியும், கௌடில்யனும் மக்களின் அடிப்படை இயல்புகளாக அடாவடித்தனம், தாதா தர்பார், காட்டுமிராண்டித்தனம், போரச்சம் நிறைந்த தன்மை போன்றவற்றை ஏற்றுக் கொள்கின்றனர்.

## “வன்முறை மனிதன்” (Home Violens)

அண்மைக்காலம் வரை வன்முறையை மனிதனின் இயல்பாக ஏற்காது, அதனை செயற்கையான ஒரு தோற்றப்பாடாகவே பெருன்பான்மையான மானிடவியலாளர்கள் கருதினர். இவர்கள் வன்முறையை மானிடசமுகத்தின் அழையாத விருந்தாளி என்றும், மனித சமுகத்தின் அனைத்து விழுக்காட்டு நிலைகளதும் காரணி என்றும் கண்டறிந்து அதனை வேண்டுமென்றே மனித இயல்பாக ஏற்காது தவித்தனர். 1960 வரை மானிடவியல் வரலாற்றில் ‘மென்முறையை’ (Non – Violence) சிலாகித்துப் பேசுவதையும், அதனை எப்படியாவது வலிந்து உட்புகுத்துவதையும் மானிடவியலாளர்கள் நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

ஆனால் மனிதரைப்பற்றிய உண்மை நிலையை, அவரது அடிப்படை வன்முறை நாட்டத்தை புரிந்து கொண்டு அதை வெளிப்படுத்திய சில அறிஞர்களும் இருந்திருக்கிறார்கள் என்பதை மேலே பார்த்தோம். இவர்கள் மனிதனின் யதார்த்தத்தை வெளிப்படுத்தியவர்கள்.

தற்காலத்தில் “உண்மையை ஏற்றுக்கொள்” – “யதார்த்தத்திற்கு முகங்கொடு” போன்ற சுலோகங்கள் முன் வைக்கப்படுகின்றன. எனவே மனிதனும் தன் யதார்த்த நிலையை ஏற்றேயாக வேண்டும். மனிதனது வன்முறை இயல்பு என்ற யதார்த்தத்திலிருந்து தப்பியோட முற்பட்டால், அது வன்முறைச் சூழலாக (Spiral of Violence) மாறி மென்மேலும் வன்முறைகளைப் பிறப்பிக்கும். எனவே ‘சமூக மனிதன்,’ ‘அறியும் மனிதன்’, ‘சுதந்திர மனிதன்’, ‘உழைக்கும் மனிதன்’, ‘கலாச்சார மனிதன்’, ‘பேசும் மனிதன்’ ‘பொருண்மிய மனிதன்’ போன்ற வெவ்வேறு மனித வெளிப்பாடுகளைப் போல, ‘வன்முறை மனிதன்’ என்பதும் மனித வெளிப்பாடுகளில் ஒன்றாக ஏற்கப்படவேண்டும். இது மனித வன்முறைத்தன்மையை ஊக்கப்படுத்தி வளர்க்கவல்ல; மனிதன் தன்னை, தனது உண்மை இயல்பை, வன்முறை

நாட்டத்தை தானே எதிர் கொண்டு, அதன் விளைவுகளைக் கண்டு அறிய வேண்டுமென்பதற்காகவே. யதார்த்தத்திலிருந்து தப்பியோடுவதிலும் பார்க்க, அதனை ஏற்றுக்கொள்வதே சிறந்த சிகிச்சை முறையாகும். ஆகவே 'வன்முறை மனிதன்' என்ற கருத்து, தவிர்க்கப்பட முடியாத கருத்தோட்டமாக, நவீன மானிடவியலில் ஏற்கப்பட்டு வருகின்றது. இதை மனிதனின் தற்கால வெளிப்பாட்டுத் தளமாக நோக்குவது இன்றியமையாததாகி வருகிறது. உலகெங்கும் பரவிவரும் வன்முறைக் கலாச்சாரம், கணத்துக்குக் கணம் பெருகி வரும் கொலைகள், குண்டு வெடிப்புக்கள், பாலியல் வல்லுறவுகள், சிறுபான்மையினர் மற்றும் ஒதுக்கப்பட்டவர்கள் மீதான அடக்கு முறைகள் ஆகியன அனைத்தும் 'வன்முறை மனிதன்' பற்றிய ஆழமான கற்றலுக்கும், சிந்தனையோட்டங் களுக்கும் இட்டுச் செல்லும்.

இப்படியான வன்முறை மனிதன் பற்றிய கருத்தாக்கத்தில் இருந்து இரண்டு கேள்விகள் எழலாம்: - வன்முறை என்பதும், வன்முறையற்ற தன்மை என்பதும் சமுதாயத்தில் இரண்டு வெவ்வேறான அம்சங்களா? - வன்முறை என்பதும் வன்முறையற்ற தன்மை என்பதும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றனவா?

இக் கேள்விகளுக்கான விடைகள் 'வன்முறை மனிதன்' பற்றிய கருத்தாக்கத்தின் வளர்ச்சிக்கு பங்களிக்கும். இவற்றை தற்கால மானிடவியலாளர்கள் தெளிவாக்க வேண்டும்.

## வன்முறை மனிதன், விலங்கு மனிதனின் தற்கால வெளிப்பாடா?

கிரேக்க மெய்யியலாளர்கள் மனிதனில் மூன்று அடிப்படையான இயல்பைக் கண்டனர்: - தாவர இயல்பு (வளருதல்), - விலங்கு இயல்பு (இடம்பெயரும் தன்மை, இனப்பெருக்கத்தன்மை, உணர்தல்), - பகுத்தறியும் இயல்பு (புத்தி, சித்தம் உள்ள தன்மை).

ஸ்தொயிக்க அறிஞர்கள் மனிதனது வன்முறை, போர்க்குணம் இவற்றை மனிதனது விலங்குத்தன்மையின் வெளிப்பாடு என்றனர். இதிலிருந்து மனித வன்முறைகளை, மனிதனது விலங்குக் குணத்தில் இருந்து தோன்றுகின்றன என்று விளக்கும் முறை வளர்ந்தது. எனவே மனிதனில் சில விலங்குகளைக் குறிப்பிட்டு அவை மனிதனில் வாழ்கின்றன என்று வர்ணிக்கும் தன்மையும் வளர்ந்தது. உதாரணமாக நாய் (கோபங்கொள்ளுதல்) கழுதை (சோம்பேறித்தனம்) நரி (ஏமாற்றுதல்) புலி (பதுங்கிப்பாய்தல்) போன்ற சில விலங்குகளோடு மனிதனது சில கெட்ட குணங்களை ஒப்பிடுவர்.

ஆனால் மனிதனது வன்முறை இயல்பை அவனது விலங்கு இயல்பில் இருந்து பிறக்கிறது என்று கூறுவது தவறானது. விலங்குகள் பாலியல் வல்லுறவில் ஈடுபடுவதில்லை; மாமிச பட்சணி விலங்குகள் கூட தமது தேவைக்கதிகமாக தமது பலியுயிர்களைக் கொல்வதில்லை. மனிதர்களது வன்முறையிலிருந்து பிறக்கும் கொடூரங்கள் கணக்கிடமுடியாதவை. (சுனாமி அழிவின் போது, அலையால் அடித்து செல்லப்பட்ட பெண்களைக் காப்பாற்றியவர்களே அவர்களைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளனர். உலகெங்கும் உள்ள சிறைக்கூடங்கள், வதைமுகாம்கள், தடுப்புமுகாம்களில் நாளாந்தம் சக மனிதர்களால் சிதறடிக்கப்படும் முகமற்ற மனிதர்களின் எண்ணிக்கை ஏராளம்) விலங்குகளுக்கு ஏராளமான முறையில் உயிர்களைக் கொல்லுகின்ற வதை முகாம்கள் பற்றித் தெரியாது. விலங்குகளிடம் சாதி, மத, இன வெறிகள் இல்லை. இவைகள் அனைத்தும் மனித வன்முறை இயல்பில் புதைந்துள்ள படியால், மனித வன்முறையியல்பு, அவனது விலங்குத்தன்மையில் இருந்து பிறக்கிறது என்று கூறி விலங்குகளைக் கீழ்மைப்படுத்தக்கூடாது.

வன்முறைப் போக்கு ஒரு மனித இயல்பு. இதை ஏற்பது தான் வன்முறையின் அளவுகடந்த அதிகரிப்பை நிறுத்தும்.

'வன்முறை மனிதன்' என்ற கருத்தாக்கத்தில் இருந்துதான் 'மென்முறை மனிதன்' என்ற கருத்தாக்கமும் வளர்ந்து வெற்றியடையும்.

## துணைநின்ற ஆக்கங்கள்:


APPADURAI, A., '*Identity, Uncertainty and Secret Agency: Ethnic Violence in the Era of Globalization*': A paper read at the conference 'Globalization and the Construction of Communal Identities', in Amsterdam, from 29 February – to 3 March 1996.

BENNET ROSS, J., 'Ecology and the Problem of Tribe: A Critique of the Hobbesian Model of Pre-Industrial Warfare', in E. Ross, ed., *Beyond the Myths of Culture: Essays in Cultural Materialism*, Academic Press: New York, 1980.

COSER, L.A., *The Functions of Social Conflict*, Routledge & Kegan Paul: London, 1956.

DARLINGTON, C. D., *The Evolution of Man and Society*, Allen & Unwin: London, 1969[2].

RICHES, D., (ed.,), *The Anthropology of Violence,* Blackwell: Oxford, 1986.


ஒருவர் அபிப்பிராயத்தைக் குறித்து கோபம் கொள்வது பலவீனத்தின் அடையாளம்

-ஹோம்ஸ்.

கடமையைச் செய். புகழ் உன் காலடியில் கிடைக்கும்.

-கைலர்.

கடமையைச் செய்வதே பெரும் புகழுக்கு வழி.

-டென்னிஸன்.

# மென்முறையின் எதிர் வினையில் ஈழப் போராட்ட வரலாறு

- M. கிங்ஸ்ரன் சுமன்ராஜ்

## காந்தியின் அகிம்சை

அகிம்சையின் தந்தை எனப் போற்றப்படும் காந்தியடிகள் 1869ம் ஆண்டு ஐப்பசி மாதம் 2ம் திகதி இந்திய தேசத்திலுள்ள குஜராத் மாநிலத்திலுள்ள போர்பந்தர் என்னும் கிராமத்தில் பிறந்தார். காந்தியடிகளின் முழுப்பெயர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்பதாகும். சிறுவயதிலிருந்தே அடிமைத்தனத்தை வெறுத்த காந்தி தென்ஆபிரிக்காவில் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை கிடைக்க தனது பணியை ஆரம்பித்து தனது சொந்த நாடான இந்தியாவிலும் அது இருக்கக் கண்டு, அதை கத்தியின்றி இரத்தமின்றி அகிம்சா தர்மத்தின் மூலம் ஒழித்திட ஆர்வம் கொண்டார்.

காந்தியடிகள் உலகில் பொன்னைவிட உயர்ந்தது உண்மை என்று கூறி உண்மைக்காக வாழ்ந்தவர். உலகில் ஒரு புது அரசியல் அத்தியாயத்திற்கு அகிம்சை மூலம் வழிவகுத்தவர். 'அன்பு அன்பை வளர்க்கும். வெறுப்பு வெறுப்பையே வளர்க்கும். வெறுப்பை அன்பினால் வெல்ல முடியும் என்பது அவரது வாழ்க்கை அனுபவம்'. மகாத்மா காந்தி இந்திய விடுதலைக்கும் அந்நாட்டின் சமூக பொருளாதார விடுதலைக்கும் கையாண்ட அறவழிகளும் சித்தாந்தங்களும் உலக நாடுகள் அனைத்தையும் கவர்ந்தன. பலாத்கார ஆயுதத்தை அடியோடு புறக்கணித்து அகிம்சைமூலம் பாரத தேசத்தை அடிமைத்தனத்திலிருந்து காப்பாற்றி மக்களுக்கு சுதந்திர வாழ்வை அளித்தார்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" (குறள் 314) வள்ளுவர் காலத்தில் அகிம்சை என்ற

சொல் வழக்கில் இருக்கவில்லை. 'இன்னா செய்யாமை' என்ற சொல்லை அகிம்சையாக காந்தியடிகளின் வாழ்க்கையின் தாரக மந்திரமாக மாறியது. உலக வரலாற்றில் விடுதலைப்போர் நடத்திய தலைவர்கள் ஆயுதங்களை நம்பியே போராடினார்கள். ஆனால் "குஜராத்திலிருந்து புறப்பட்ட அந்த ஒற்றை மனிதன் எந்த ஆயுதமும் எடுக்காமல் அகிம்சை என்ற வன்முறையற்ற செயலால் களம் புகுந்து விடுதலையைக் கொணர்ந்தார்."[5] இங்கு தான் காந்தியின் அகிம்சா வழிக்கு வரைவிலக்கணம் பிறக்கிறது. துறவிகளும் மகான்களும் மட்டுமல்ல, சாதாரண மனிதர்களும் இதைக்கைக்கொண்டு வெற்றிபெறலாம் என்று நிருபித்தார். அகிம்சை - சத்தியம் என்ற இரண்டு முகங்களைக் கொண்ட தர்ம நாணயத்தை உருவாக்கினார். இவரின் அகிம்சைவழி அவர் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டங்கள் மூலம் வெளிப்படுகிறது. 1913ம் ஆண்டிலிருந்து 1947ம் ஆண்டுவரை 17 தடவைகள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருக்கிறார். இவரின் அகிம்சையின் முக்கிய நோக்கங்களாக இந்து - முஸ்லிம் ஒற்றுமை, மேற்கத்தைய மோகத்திலிருந்து விடுதலை போன்றவை கொள்ளப்படுகின்றன. வன்முறைகள் அற்ற விடுதலைக்கு காந்தியடிகள் உதாரணமாக திகழ்கிறார்.

## மாட்டீன் லூதர் கிங்கின் அகிம்சாவழி

உலக அரங்கிலே என்றுமே சமாதான வீரர், வன்முறையை விரும்பாத இலட்சியவாதி, நிறம், சாதி எதையும் கண்டுகொள்ளாத பொதுநலவாதி என்றெல்லாம் பேசப்படுபவர் தான் மாட்டீன் லூதர் கிங். இவர் 1929ம் ஆண்டு ஜனவரி மாதம் 15ம் திகதி அமெரிக்காவில் கறுப்பினத்தவராகப் பிறந்தார். இவர் பிறந்த காலத்தில் தான் நிலப்பிரிவினை மேலோங்கிக் காணப்பட்டது. இவரின் குடும்பத்தினர் கிங் குடும்பத்தினர் என அழைக்கப்பட்டனர். இவர்கள் "ஆர்பன் அவென்யு" என்ற இடத்தில் வசித்து வந்தனர்.

---

[5] ரா. வேங்கடராஜிலு எழுதிய "மகாத்மா காந்தியின் சுயசரிதை", என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

இன ரீதியான, அதிலும் நிறப்பிரிவினையின் உச்சக்கட்டத்தில் கறுப்பினத்தவன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தான் வசிக்க முடியும் என்ற கடும் போக்கான நேரத்தில், இன ஒடுக்கல்கள் இழையோட ஆரம்பிக்கையில்தான் கறுப்பினத்தவரின் சார்பில் குரல் கொடுக்க வந்தார். கல்வியில் மட்டுமல்ல, ஏனைய செயற்பாடுகளிலும் முன்னேறுவதற்கு இவர்களுக்கு சுதந்திரமான வழிகள் எதுவும் பிறக்கவில்லை. இருந்தும் ஒரு சிலர் விடாமுயற்சியால் முன்னேற்றம் அடைந்தனர். இவர்களுள் மாட்டீன் லூதரும் ஒருவர். வன்முறையை விரும்பாத குடும்பத்தில் உதித்த இவர் சாதுவான போக்குடன், வன்முறையற்ற இலட்சியக்கனவுடன் விடிவிற்காகத் துடித்தார். இயேசுவின் வன்முறைகளற்ற தார்மீக நோக்கு இவரைக் கவர்ந்தன. அதுமட்டுமல்லாது "ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு; பகைவரை அன்பு செய்யுங்கள்" என்ற இயேசுவின் வார்த்தைகள் இவரின் மனதில் பதிந்தது மட்டுமல்லாது அகிம்சையின் உணர்வுக்கும் வித்திட்டது எனலாம். ஒரு சந்தர்ப்பத்தில் "உங்களிடம் ஆயுதங்கள் இருந்தால் அவற்றை வீட்டிற்கு எடுத்துப்போங்கள், இல்லாவிட்டால் அவற்றைப் பெற முயற்சி செய்யாதீர்கள். வன்முறையை வன்முறையால் வெல்ல முடியாது எனக் கூறியிருக்கிறார்". இதன் மூலம் இவரின் அகிம்சா தர்மம் சிறப்பிடத்தைப் பிடித்துள்ளதைக் காணலாம்.

கறுப்பினத்தவருக்கு எந்தவிதத்திலும் சுதந்திரம் கிடைக்கவில்லை. நிறவேறுபாடு என்ற பெயரில் பல பிரிவினைகள், பாகுபாடுகள், ஒடுக்குமுறைகள் ஒன்றன்பின் ஒன்றாக மாறாத நோயாகக் காணப்பட்டன. இவற்றிற்கு மருந்திட்டு குணப்படுத்தும் பொருட்டு பல அகிம்சை ரீதியான இயக்கங்களை ஆரம்பித்து வைத்தார். அவற்றுள் "அர்பன் லீக்" (Urban Leaque), "கறுப்பு மக்களின் முன்னேற்றத்திற்கான தேசிய சங்கம்", "இன சமத்துவ காங்கிரஸ்", "மாணவர் அகிம்சா தர்ம இணைக்கக் கமிட்டி" போன்றன முக்கியமானவை ஆகும். இவை அனைத்துமே அகிம்சை வழி தீர்வையே இலட்சியமாக கொண்டு செயற்பட்டன. அடுத்து தன் உள்நாட்டு அடிமைப்படுத்தலை

மட்டுமல்ல வியட்நாம் போரையும் எதிர்த்துப் போராடினார். உள்நாட்டில் குடியுரிமைகள் மறுக்கப்படுவது, மனித நேயமற்ற வறுமை நிலவுவது ஆகியவற்றுக்கும், பத்தாயிரம் மைல்களுக்கப்பால் பண்டைய கலாச்சாரம் கொண்ட மக்கள் மீது புதிய காலனிய ஆட்சியாளர்களாகிய தன்நாட்டுப்படைகள் தினமும் அடக்குமுறைகளை ஏவிவருவதற்கான தொடர்பைக் குறித்து மற்றவர்களுக்கு விளக்கியது மட்டுமல்லாது அதை உடனே நிறுத்தும் படியும் அழுத்தம் கொடுத்தார். இறுதியாக அமெரிக்க சமூகத்தின் மையமான பிரச்சினையான பொருளாதார அநீதியை எதிர்த்து ஒரு முடிவிற்கு வர தூண்டுகோலாக அமைந்தார். இப்படிப்பட்ட இன ஒதுக்குகளுக்கு தன்னையே முழுமையாக அர்ப்பணித்தவர். இவர் ஓர் அரசியல் தலைவரோ, கருத்தியல் ரீதியான புரட்சியாளரோ அல்ல. மாறாக ஒரு வன்முறையற்ற சமத்துவ விரும்பி.

## தியாகி திலீபனும் அகிம்சா வழியும்

தியாகி திலிபன் என அழைக்கப்படும் இராசையா பார்த்தீபன் யாழ்ப்பாணத்திலுள்ள ஊரெழு என்ற கிராமத்தில் பிறந்தார். இவர் ஒரு மருத்துவ பீட மாணவனாக கல்வி கற்று வந்தார். ஒடுக்கு முறைகள், அடிமைத்தனப் போக்குகள் வடக்குக் கிழக்குப் பகுதிகளை ஆக்கிரமித்தவேளையில், சொந்த நாட்டுப்படையால் மட்டுமல்ல அயல் நாட்டுப்படையாலும் கூட நெருக்கீடுகள் தோற்றம் பெற்றன. அவ்வேளையில் "வன்முறையால் உண்மையை நிலைநாட்டி சமத்துவத்தை நிலைநாட்ட முடியாது. 'அமைதிகாக்கும் படை' என்ற பெயரில் வந்தவர்கள் அமர்க்களம் புரிய ஆரம்பித்த வேளையில் அகிம்சை வழியில் தான் அவர்களுக்கு உண்மையை உரைக்க முடியும். அகிம்சையால் சுதந்திரம் பெற்ற நாட்டினர்க்கு, அகிம்சை என்றால் என்ன என்பதை காந்தியிடம் அனுபவித்தவர்களுக்கு அது பற்றிப்புரியும்" என்று அகிம்சைப் போராட்டத்தில் குதித்தார் திலீபன்.

எந்தவொரு அகிம்சையும் முழு வெற்றியை அளிக்காவிட்டாலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியே செல்கின்றது. எவ்வளவோ ஆயுதப்போராட்டங்கள் தோல்வியில் முடிந்திருக்கலாம். ஆனால் அகிம்சை என்றுமே தோற்றதாக இல்லை. இது வரலாற்று உண்மை. இதை நன்கு அறிந்த தியாகி திலீபன் 1987ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14ம் திகதி ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து இன ஒடுக்கு முறைக்கு எதிராக நீதியைத் தட்டிக்கேட்க ஒரு போராளியாக இருந்தும் துப்பாக்கி எதையுமே ஏந்தாது, அகிம்சா தர்மத்தின் மூலம் விடிவுகாண நீர், ஆகாரம் எதுவுமே உட்கொள்ளாது தியாகப்போரைத் தொடங்கினார். 1. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறையில் உள்ளோர் விடுவிக்கப்படவேண்டும். 2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடாத்தப்படும் சிங்களக் குடியேற்றம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். 3. இடைக்கால அரசு நிறுவப் படும் வரை புனர்வாழ்வு என்ற பெயரில் அழைக்கப்படும் அனைத்து வேலைகளும் நிறுத்தப்படவேண்டும். 4.வடக்குக்கிழக்கு மாகாணங்களில் பொலிஸ்நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். 5. இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்காவல் படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப் பெறப்படவேண்டும், பாடசாலைகளில், வீடுகளிலிருந்து இராணுவம், பொலிஸ் வெளியேற வேண்டும் போன்றன அவர் முன் வைத்த ஐந்தம்சக் கோரிக்கைகளாகும்."[6]

திலிபனின் அகிம்சைப் போராட்டம் ஒரு பொது நலனுக்காகத் தனியொருவன் தன்னை உதிர்க்கும் ஒப்பற்ற தியாகம். மற்றவர்கள் சுதந்திரமாகவும் கண்ணியத்தோடும் வாழவேண்டும் என்பதற்காக "வீரம்மிக்க ஒரு இளைஞன் வன்முறையில்லாது தனக்குத் தானே மரணதண்டனை வழங்கும் ஓர் உயர் கொடை." இப்படிப்பட்ட அகிம்சைத் தன்மையால்

---

[6] சி. புஸ்பராசா எழுதிய ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

திலீபனின் பெயர் அகிம்சை வாதிகளின் பெயர்ப்பட்டியலிலே பொறிக்கப்பட்டுள்ளது.

## தந்தை செல்வாவும் அகிம்சை வழியும்

ஈழத்தமிழ் இனத்தின் தனித்துவத்தை நிலைநாட்டிய ஒப்பற்ற தலைவரும், ஈழத்தமிழ் மக்களின் தலைவிதியை மாற்றியமைக்க விடுதலையை அகிம்சையால் வெல்லலாம் என்ற கூற்றை நம்பியவருமான தந்தை செல்வா 1898 ம் ஆண்டு பங்குனி மாதம் 31ஆம் நாள் வேலுப்பிள்ளை அன்னம்மா தம்பதிகளுக்கு மலேசியா நாட்டு ஈப்போ நகர மண்ணிலே பிறந்து தெல்லிப்பளைக் கிராமத்திலே வளர்ந்தார். இவர் தனது கல்வியை தெல்லிப்பளை புனித தோமஸ் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றிலே கற்று சட்டம் பயின்று வழக்கறிஞராகத் தேறினார்.

இலங்கை அரசானது சிறுபான்மை என்ற தலைப்பின் கீழ் அடிப்படை மனித உரிமைகளை மதிக்கத் தவறிய வேளைகளில் உண்மையை நிலைநாட்டத் துணிந்தார். ஈழநாட்டிலே பல தலைமுறைகளாக உழைத்துவரும் மலையக தமிழ் மக்களின் குடியுரிமைகளை பறிக்கும் இலங்கை குடியுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டதைக் கண்டு கொதித் தெழுந்தார். அது மட்டுமன்றி 1956ம் ஆண்டு S. W. R. D. பண்டாரநாயக்காவின் ‘சிங்கள மாத்திரம்’ என்ற நெருக்கடியைக் கண்டு அதற்குத் தீர்வு காண அலைந்தார். இறுதியில் ஒரு வழியைக் கண்டார். அதன் வழி வன்முறைகள் அற்ற அகிம்சைப்போராட்டத்திற்கு உருக்கொடுத்தார். பெரும்பான்மை பலத்தால் நசுக்கப்பட்டு உரிமைகளை இழந்த சிறுபான்மையோருக்கு மீண்டும் அவ்வுரிமையைப் பெற்று விடுதலை அடைவதற்கு ஒரே வழி காந்தியடிகள் பின்பற்றிய சத்தியாக்கிரகமே என்பதைக் கூறி அவ்வழி நடந்தார். இதன் பொருட்டே ஈழத்துக் காந்தி எனவும் தந்தை செல்வா வர்ணிக்கப்படுகிறார். முதன் முதலாக 1956ஆம் ஆண்டு கொழும்பிலே காலிமுகத்திடலில் சத்தியாக்கிரக அகிம்சா தர்மப் போராட்டம் இவரால் ஆரம்பிக்கப்பட்டது. அப்படியான சந்தர்ப்பத்தில் பல தடவைகள் காயப்பட்டார். இருந்தும் தனது

கோரிக்கைகளிலிருந்து பின்வாங்கவில்லை. இவரின் அகிம்சாப் போராட்டம் அனைவரையும் அக்காலத்தில் கவர்ந்தது.

1956 ம் ஆண்டு தொடக்கம் 1977 ம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் 21 வருட காலத்தில் தமிழ் பேசும் மக்களின் அபிமான வீரனாக உயர்ந்து நின்று பல அகிம்சா இயக்கங்களைத் தோற்றுவித்து இலங்கையின் பல பாகங்களிலும் அதனை செயற்பட வைத்து ஆங்காங்கே அடக்கு முறைகளுக்கெதிராக அழுத்தங்கள் கொடுத்தார். இதன் விளைவாக பண்டா - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன்மூலம் தமிழ் மக்களின் மரபு வழித் தாயகம், சிறுபான்மை இனத்தின் மொழியாக தமிழ் மொழிப் பிரயோகம், வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு ஓரளவு தன்னாட்சி அதிகாரம் வழங்குதல் என்ற தமிழரின் உரிமைகளை தந்தை செல்வா அவர்கள் ஆயுதம் ஏந்தாமலே தமிழ் மக்களுக்கு ஈட்டிக்கொடுத்தார்.

**துணைநின்ற நூல்கள்:**


சிறிஸ்கந்தராசா, இராமசாமி, *உலகப் பேரொளிஉத்தமர் காந்தி*, வெள்ளவத்தை: ரெக்ணோ பிரிண்டர்ஸ், 2004.

MARTIN LUTHER KING, *Stride Toward Freedom: the Montgomery Story*, New York: Harper & Row, 1958.

CLAYBORNE CARSON, ed., *The Autobiography of Martin Luther King*, New York: Warner Book, 1998.

இராமசாமி, N., *சமாதான வீரர் மாட்டீன் லூதர் கிங்*, சென்னை: இளங்கோ பதிப்பகம், 1967.

RAJENDRAN, M., *S.J.V. Selvanayagam* (Atribute), Colombo: Sparatan Press, 1978.

காலேஸ்கர், கா., *காந்திக்காட்சிகள்* (மொழிபெயர்ப்பு: கோ. கிருஸ்ணமூர்த்தி), திருப்பூர்: ஸர்வொதய பிரசுராலயம், 1950.

அடேல் பாலசிங்கம், சுதந்திர வேட்கை.

செல்வநாயகம் நினைவுச் சொற்பொழிவு: பேராசிரியர் ஜெயரட்ணம் உவில்சன்.

# சுதந்திரம் பற்றிய மெய்யியல் கண்ணோட்டமும் சமுதாயமும்

- அ. றொக்சன் குருஸ்

மனிதன் சுதந்திரமாக பிறக்கின்றான் ஆனால்
அவன் எங்கும் விலங்கிடப்பட்டுள்ளான் (ரூசோ)

வாழ்க்கை வாழப்படவேண்டும். அதுவும் சுதந்திரமாகவும் சமத்துவத்துடனும் வாழவேண்டும் என்பது மனிதனுள் உள்ள இயல்பான ஏக்கங்களும் விருப்பங்களும் ஆகும். எவ்வேளையும் சுதந்திரப் பறவையாக வலம் வர ஆசைப்படுவான் மனிதன். எனவே இந்த சுதந்திரத்தின் இயல்பைப் பற்றி மெய்யியல் கண்ணோட்டத்தில் சற்று உற்றுநோக்க முனைகின்றேன்.

மனிதன் ஓர் சுதந்திரப்பறவை. சுதந்திர செயலின் படைப்பாளனும் அவனே. தனக்கு எது விருப்பமாக, நல்லதாக தோன்றுகிறதோ அவற்றை அவன் அடைய, செயல்முறைபடுத்த முனைகின்றான். அதனை நிறைவேற்றுகின்றான். அந்த செயலுக்கு அவனே பொறுப்பாளியாகவும் மாறுகின்றான். ஆகவே இந்த சுதந்திர செயலுக்கு கடவுளோ, வான தூதர்களோ, தீய ஆவிகளோ, இயற்கையோ, சமூகமோ, அரசியலோ காரணமாய் இருக்க முடியாது. இச்சுதந்திரம் மனிதனுக்கு வழங்கப்பட்ட ஓர் கொடையாகும். எனவே இந்த சுதந்திரமானது தனித்துவ தன்மை கொண்டதாகவும், சிறப்பாக மனிதனுக்கு மட்டுமே உரித்தானதாகவும் அமைகின்றது. இச்சுதந்திரம் வேறு எந்த உயிருள்ளவற்றிற்கோ அல்லது உயிரற்ற சடப்பொருட்களுக்கோ உரித்தானதல்ல. எனவே சுதந்திரமானது மனிதனுக்கு மட்டும் உரித்தானது. இந்த சுதந்திரமானது இயற்கைக்கு கட்டுப்பட்டது அல்ல என்றே நாம் கூறலாம்.

சுதந்திரத்தின் இயல்பைப்பற்றி பார்க்கின்றபொழுது புனித தோமஸ் அக்குவினாஸ் மற்றும் பல மெய்யியலாளர்களின் கருத்துப்படி ஒரு மனிதனின் சுதந்திர செயலுக்கு மூன்று முக்கிய காரணிகள் துணை நிற்கின்றன:

1. நிதானித்த ஆழ்ந்த யோசனை (Deliberation)
2. தீர்மானம் (Judgment)
3. தேர்வு / தெரிவு (Election)

எனவே ஒரு காரியத்தை செய்யுமுன் அதனைப்பற்றி ஆழ்ந்து யோசித்த (Deliberate) பின் தீர்மானம் செய்து (Judge) அதன் பின் அது நல்லதென தெரிந்து அதனை தெரிவு செய்து (Elect) நிறைவேற்றுவதே சுதந்திர செயல் எனப்படுகின்றது.

நிதானித்த ஆழ்ந்த யோசனை என்றால், ஒரு செயலை நிறைவேற்றுவதற்கு முன் அச்செயலைப்பற்றி ஆராய்ந்து விசாரணை செய்யும் கட்டமாகும். தீர்மானம் என்றால் மதிப்பீடு செய்யும் கட்டமாகும். தேர்வு என்றால் தீர்மானிக்கும் கட்டமாகும். எனவே ஒரு சுதந்திர செயலில் இம்மூன்று காரணிகளும் உள்ளன.

ஒரு காரியத்தை நிறைவேற்றுவதற்கு முன் அச்செயலால் ஏற்படும் நன்மை, தீமைகளை அறிந்து அச்செயலை தீர்ப்பிட்டு தீர்மானிக்கின்றோம். இவற்றை தீர்மானித்த பின் எமக்கு நன்மையென தோன்றும் செயலை தேர்ந்தெடுத்து அதை நிறைவேற்ற முயல்கின்றோம். அறிவுக்கும் (Intellect), சித்தத்திற்கும் (Will) இடையில் ஏற்படும் உரையாடல் காரணமாகவே இவற்றை அறியக்கூடியதாக இருக்கின்றது. ஒரு செயலை தேர்ந்தெடுக்கும் பொழுது அறிவின் சக்திக்கும் மற்றும் ஆசை விருப்பத்தின் சக்திக்கும் இடையில் உரையாடல் நடைபெறுகிறது. இதனையே சுதந்திர செயல் என அழைக்கின்றோம்.

சுதந்திரம்பற்றி சில மெய்யியலாளர்களின் கருத்தைச்சற்றுப் பார்ப்போம்.

புனித அகுஸ்தினார் : "சுதந்திரம் என்பது ஒருவன் தீமைகளின் மத்தியிலும் நன்மையை தேர்ந்தெடுத்து நிறைவேற்றுவதாகும்".

புனித தோமஸ் அக்குவினாஸ்: "சுதந்திர செயலின் சக்தி சித்தத்தில் (Will) உள்ளது. அத்துடன் அறிவிலும் (Intellect) இது தங்கியுள்ளது." இவர் மேலும் கூறுகையில் "தேர்ந்தெடுக்கும் சக்தியானது சில நேரங்களில் அறிவுக்கும், சில நேரங்களில் சித்தத்திற்கும்

உரித்தானதாகக் காணப்படுகின்றது. நன்மை கடவுளுக்கு இணையானது. ஆகவே நன்மையை விரும்பித்தேடுதல் என்பது கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுதல் ஆகும். எனவே உண்மையான சுதந்திரம் என்பது கடவுளின் விருப்பத்தை, திட்டத்தை நிறைவேற்றுதல் ஆகும்".

ப்ளோன்டல் **(Blondel):** "விரும்பப்படுகின்ற சித்தத்திற்கும் (Willing will) மற்றும் விரும்பப்பட்ட (ஆசிக்கப்பட்ட) சித்தத்திற்கும் (Willed will) இடையில் வேறுபாடு உண்டு. மனிதன் நிறைவற்றவனாக - திருப்தியற்றவனாக இருப்பதற்குக் காரணம், அவன் விரும்புகின்ற சித்தத்திற்கும், விரும்பிய சித்தத்திற்கும் இடையில் ஓர் ஆழமான தொடர்பை ஏற்படுத்தாமையே ஆகும்".

ப்ரோம் **(Fromm):** "சுதந்திரத்தை நேரிடையான சுதந்திரம் (Positive Freedom) என்றும் எதிர்மறையான சுதந்திரம் (Negative Freedom) என்றும் பாகுபடுத்தலாம். நேரிடையான சுதந்திரம் என்பது தன்னிச்சையாகவே ஒருவன் தன்னைப்பற்றி தெளிவாக அறிந்துகொள்வதாகும். எதிர்மறையான சுதந்திரம் என்றால் பல்வேறு வகையான தேவைகள், அடக்குமுறைகள், அதிகாரம் என்பவற்றில் இருந்து விடுதலையுடன் வாழ்தலாகும்".

கலோஜெரோ **(Calogero):** "சுதந்திரத்தை முன்னதாகவே இருக்கும் சுதந்திரம் (Presupposed Freedom) என்றும், உயர்வான சிறந்த சுதந்திரம் (Ideal Freedom) என்றும் வேறுபடுத்தலாம். முன்னையது தேர்ந்தெடுக்கும் சக்தி; பின்னையது நல்லதை தேர்ந்தெடுக்கும் சக்தி.

இம்மெய்யியலாளர்களினது 'சுதந்திரம்' பற்றிய கருத்தை ஆழமாக சிந்தித்துப் பார்த்தால் அவர்கள் கூற விளைவது 'சுதந்திர செயற்பாட்டுக்கு மனிதனே பொறுப்பு' என்பதாகும்.

மனிதன் தன்னிடமுள்ள சுதந்திரத்தை சில வேளைகளில் அழிவின் நோக்கத்திற்காகவும் பயன்படுத்தலாம். உதாரணமாக ஒருமனிதன் கரத்தில் ஓர் ஆயுதம் இருக்கும்பொழுது அவன் தனது சுதந்திரத்தை பாவித்து தனக்கு விரும்பியதை செய்யப்பயன்படுத்தலாம். இச்சுதந்திரத்தை தூய்மையான நோக்கத்துடன் உண்மையாக பாவிக்கும் பொழுது அம்மனிதன் புனிதனாகவும், வீரனாகவும், மனிதத்தை

வளர்ப்பவனாகவும் ஆகின்றான். அதனை தீமையான முறையில் பாவிக்கும் பொழுது ஓர் தீவிரவாதியாகவும் துர்ப்பழக்கம் உள்ளவனாகவும், சுயநலமுடையவனாகவும், மற்றவரை சுரண்டி வாழ்பவனாகவும் மாறுகின்றான்.

இக்கருத்தை மனதில் இருத்தி சமுதாய நிலையை சற்று உற்று நோக்கிப் பார்க்கின்ற பொழுது சுதந்திரம் அற்ற நிலையையே காணக்கூடியதாக இருக்கின்றது. மனிதன் சக மனிதர்களை சிறைப்படுத்தி, அடிமைப்படுத்தி மகிழ்கின்றான். சாதியின் பெயரால், இனத்தின் பெயரால், மொழியின் பெயரால் பாலினத்தின் பெயரால் மக்களை கூறுபடுத்தி, பாகுபடுத்தி, சிந்தனையை மழுங்கடித்து மிருகங்களைவிட கேவலமாக நடத்துவதை இன்று நாம் கண்கூடாக காண்கின்றோம்.

புனித அகுஸ்தினார் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவதே உண்மையான சுதந்திரம் என்று கூறுகின்றார். ஆனால் எங்கே கடவுளின் விருப்பம் நிறைவேற்றப்படுகின்றது? எங்கள் விலங்குகள் கழற்றப்படவில்லை. விலங்குகளின் சாவிகள் தான் கைமாறியுள்ளன. இதனால்தான் பாரதியார் "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்; என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்" என்று பாடுகின்றார்.

சுதந்திரம் மனிதனுக்கு வழங்கப்பட்ட ஓர் கொடை. எனவே மனிதனின் சுதந்திர தாகம் அவன் கருவறையில் உருவான நாளிலிருந்தே உருவாகி கல்லறை வரை அவனைத் தொடர்வதைக் காணலாம். கருவான நாள் முதலே தாயின் கருவறையிலிருந்து எப்படி, எப்போது வெளிவரலாம் என கையையும் காலையும் அசைக்கிறது குழந்தை. எனவே ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு மனிதனுக்கும் சுதந்திரதாகம் உள்ளது. மனிதன் மாண்புடையவன் உண்மையில் அவன் நடமாடும் இறைவனின் சாயல். அவனது மாண்பு மகத்துவம் மறுக்கப்படும் போது இறைவனின் திட்டமும் மறுக்கப்படுகின்றது. இந்த நிலையில் நாம் சுதந்திரம் அற்ற நிலையையே எங்கும் காணுகின்றோம்.

சிறப்பாக சுதந்திரம் என்பதற்காக ஒருவர் எதையும் செய்ய எனக்கு உரிமை உண்டு; என் விருப்பம் போல் நடப்பேன் என்று சொல்ல முடியாது. உனது கை அடுத்தவனின் மூக்கில் படாதவரை நீ சுதந்திர மனிதன். இதற்கு அர்த்தம் யாதெனில் உண்மையான சுதந்திர

மனிதன் அடுத்தவரின் சுதந்திரத்தை மதிக்கும் மனப்பான்மை உடையவனாக காணப்படுவான் என்பதாகும்.

ஆனால் இன்றைய சமுதாயத்தில் இந்த நிலைக்கு எதிரான செயலையே காணக்கூடியதாக இருக்கின்றது. பாலியல் வல்லுறவு, சிறுவர் பலாத்காரம், மனிதக்கொலை, கருவழிப்பு, சிறிய பெரிய போர்கள் என்பன மனித சுதந்திரத்திற்கு எதிரானவையாக காணப்படுகின்றன. இவைகள் எம் சமுதாயத்தில் நாளாந்த செயற்பாடாகவும் மாறிவிட்டன. இந்நிலை இங்கு அடுத்தவரின் சுதந்திரத்தை மதிக்கும் சுதந்திர மனிதர்கள் இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. இங்கு ஒருவரால் தன்னுடைய வாழ்வை தீர்மானிக்கும் நிலையோ (Positive Freedom) தனக்கு நன்மையானது என கருதுவதை நிறைவேற்றும் நிலையோ (Ideal Freedom), பல்வேறு வகையான தேவைகள், அடக்கு முறைகள், அதிகாரம் என்பவற்றில் இருந்து விடுதலை பெற்று வாழும் நிலையோ (Positive and Negative Freedom) இல்லை. எனவே மனிதன் விலங்கிடப்பட்டுள்ளான். ஆனால் சுதந்திரம் என்பது திருவள்ளுவர் கூறுவது போல "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" மனிதனின் பிறப்புரிமையாகும். ஆனால் இன்று அது கேள்விக்குறியாகிவிட்டது.

"மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான் - ஆனால்
அவன் எங்கும் விலங்கிடப்பட்டுள்ளான்"



# அர்த்தத்தைத் தேடும் மனிதன்

- G. ஜெயராசா

இக்கால உலகின் போக்கு இயந்திரமானதாக காணப்படுகின்றமையால் மனித வாழ்வும் ஓய்வற்ற இயந்திரத்தன்மையுள்ளதாக மாறிவிட்டது. இந்த நவீன இயந்திரமயப் பின்னணியில் பலரும் மனித வாழ்வின் அர்த்தத்தினைத் தேடுவதில் முனைப்பாகக் காணப்படுகின்றனர். மனிதனது இயற்கையான நாட்டம் அர்த்தத்தைத் தேடுவதாகும். அமெரிக்காவிலுள்ள யோன்ஸ் கொப்கின்ஸ் (John Hopking) பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட ஒரு மதிப்பீட்டு ஆய்வை இங்கு நோக்குவோம். அங்கு உள்ள 7948 மாணவர்களிடையே நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 18% மாணவர்கள் வாழ்க்கைக்கு அர்த்தத்தினைக் கொடுப்பது செல்வம் என்று கூற 72% ஆன மாணவர்கள் "வாழ்வில் அர்த்தத்தை தேடுவதே ஒப்பற்ற செல்வம்" என்று கருத்து வழங்கி நின்றனர். இதனடிப்படையில் இன்று உலகம் பூராகவும் அர்த்தத்தினைத் தேடும் மனித எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்வதை காணலாம்.

பலர் வாழ்வுக்கு பல வழிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் அந்த வழிகளின் ஊடாக வாழ்வின் அர்த்தத்தினைக் காண்பவர்கள் அரிதாகவே இருக்கிறார்கள். இன்று மனித வாழ்வின் அர்த்தமாக பணம், பதவி, சமூக அந்தஸ்து என்பனவே மேலோங்கிக் காணப்படுகின்றன. இவையாவும் நிரந்தரமற்ற அர்த்தங்களாகவே சிறிது காலம் நிலைத்திருக்கின்றன. மனிதனுடைய ஏக்கம் இவற்றோடு முடிவடைந்து விடுவதில்லை. மாறாக தேடல்கள் நாளுக்கு நாள், காலத்திற்குக் காலம் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றன. வாழ்க்கையின் அர்த்தம், அர்த்தத்தை அடைவதற்கான தாகம் அதிகரித்து இருக்கின்றது என்பதையே இன்றைய இருப்பியல்வாதம் காட்டுகின்றது. கடந்த நூற்றாண்டிலே மக்கள் சமயத்தலைவர்களை நாடி சமயரீதியிலே வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுக்க முயன்றனர். இன்று மக்கள் வாழ்வின் அர்த்தத்தினை முழுமனிதப் பிரச்சினை என்றும், இது அனைத்து மக்களுக்கும் (நாத்திகனுக்கும்) உரிய பிரச்சினையென்றும் எண்ணி உளவளத் துணையாளர்களை நாடுகிறார்கள். இது அர்த்தத்தேடல் உள்மனரீதியில் அதிகரித்திருக்கின்றத என்பதைக் காட்டுகிறது.

அர்த்தத்தைத் தேடும் மனிதர் முதலில் தங்களுடைய இருப்பின் அர்த்தம் என்ன என்பதையே காணவிளைகிறதை நோக்க முடிகிறது. மனிதனின் சாராம்சத்தைத் தேடுவது மெய்யியலில் அன்று முதல் இன்று வரையான தேடலாகும். தேடல் என்று நோக்குகையில் அனைத்து மக்களினதும் தேடல்கள் ஒன்றானதாக அமைவதில்லை. இத்தேடலானது ஒவ்வொருவரினதும் தனித்துவம், கல்வி, சமூகப்பின்னணி, எதிர்காலப்போக்கு என்பனவற்றுக்கேற்ப மாறுபட்டே காணப்படுகின்றது. மனிதர் தமது வாழ்வின் அர்த்தத்தினை அல்லது சாரத்தினை தேடுவது பொதுவானதாக அமைந்தாலும் அவரது தேடல் நாளுக்கு நாள், மணிக்கு மணி மாறுபட்ட தன்மையினைக் கொண்டுள்ளது.

மனிதர் தமக்கு விருப்பமானதொன்றை அல்லது இலகுவானதொன்றை தேர்ந்தெடுத்து அதன்படி வாழ்வது அர்த்தத்தின் தேடலல்ல. மாறாக தனக்குரிய அழைப்பிற்கும் எதிர்காலப் பணிக்கும், திறமைக்கும் ஏற்ற முறையில் கடினமான பாதையில் நடந்து அர்த்தம் காணமுனைகிற வேளையில்தான் வாழ்வு வெற்றியடையும். இவ்வாறு மனிதர் அர்த்தத்தினை கண்டடைவது ஒருவகையான விஞ்ஞான ஆராட்சிக் கண்டுபிடிப்பு போன்றதாகும். இவ்வாறு மனிதர் அர்த்தத்தினை கண்டடைந்த இந்நிலையில்தான் சடப்பொருள்கள், உலக இன்பங்கள், அதிகாரங்கள் அனைத்தும் வெறுமையைக் கொடுக்கின்றன. அர்த்தமானது மனித வாழ்க்கையின் அகக் கண்களுக்கு புத்தொளியூட்டுகின்றது. கலங்கிய நீர் தெளிவடைந்து நன்னீராக மாறுவதைப்போல, பல ஏக்கங்கள், கலக்கங்களில் மூழ்கியிருக்கும் மனிதரை அர்த்தம் தெளிவுள்ளவராக மாற்றுகின்றது.

ஆஸ்திரிய உளவியலாளர் விக்டர் பிறாங்கிளின், "மனிதர் தமது வாழ்க்கையின் போக்கிற்கேற்ப அர்த்தத்தினை அடைவதை விட, அர்த்தத்தின் பால் வாழ்க்கையை நகர்த்தி அதிலே இன்பம் காண்பதுதான் மேலானது" என்கிறார். பலர் வாழ்வில் அர்த்தத்தினை அறிவியல் ரீதியாக சென்று அடையலாம் எனக் கருதுகிறார்கள். முழுமையான அர்த்தத்தினை அடைய எமது அடிமனதில் சிந்தனையின்பால் ஏற்படும் தேடலே காரணமாகிறது. "எவனொருவன் தன் வாழ்க்கைப் பாதையில் கருத்துடன் சிந்தித்து பயணிக்கிறானோ அவன் எந்தவகையிலும் எதையும் எதிர்கொள்ளத் தயாரானவனாக இருக்கின்றான்" என்கிறார் மெய்யியலாளர் நீச்சே. எப்போது மனிதர் தாம்

ஏன் வாழ்கின்றார் என நினைக்கிறாறோ அப்பொழுதுதான் கருத்தூன்றிய வாழ்வு தளைவிடுகின்றது.

பகுத்தறிவுள்ள மனிதர் அனைவரும் ஏதோ ஒரு விதத்தில் வாழ்க்கையின் அர்த்தத்தினை தேடுபவர்களாகவே இருக்கிறார்கள். பலருக்கு அர்த்தம் வாழ்க்கை முழுவதும் மறைவானதாகவே (Potential) இருந்து விடுகின்றமையால் அவர்கள் வாழ்க்கையின் உச்சப்பயனை அடையமுடியாதவர்களாக மாறிவிடுகிறார்கள். அர்த்தத்தினை அடையாத பலர் பல வேளைகளில் விரக்தி நிலையிலான வாழ்வை வாழுகிறார்கள். மனிதர்களாகிய நாம் காற்று வீசும் திசையில் சாயும் நாணல்களைப் போல் உலகியல் சுகபோகங்களில் மட்டும் சாய்ந்து விடாமல் வாழ்வின் அர்த்தம் கண்டு அவ்வர்த்தத்தின் முழுமையை அடைய சிந்திப்போம்; வாழ்வை செயற்படுத்துவோம்.

மனித மனம் நரகத்தைச் சொர்க்கமாக்கும். சொர்க்கத்தை நரகமாக்கும்

-ஜான் மில்டன்.

ஒரு மனிதனிடமுள்ள குறைகளை சுட்டிக் காட்டுவதை விடவும், நிறைகளைப் பாராட்டுவது சிறந்ததாகும்.

-கார்லைல்

உங்களிடமுள்ள அன்பு, சந்தேகங்கள் எல்லாவற்றையும் எரித்துவிடும்.

-லாங்.:.பெல்லோ.

வெட்கம், வெறுப்பு, அச்சம் ஆகியவற்றுக்கு ஆளாகிறவன் ஒருபோதும் மேன்மை அடைவதில்லை.

-ஸ்ரீ ராமகிருஸ்ணர்.

# ஒழுக்கவியலில் கருக்கலைப்பு

- விமல்ராஜ், OMI

நவீன உலகின் ஒழுக்கவியலிலே பலவதமான நிகழ்வுகள் முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. இவற்றினுள் கருக்கலைப்பு, கருக்கொலை, ஒரு பாலுறவு, பாலியல் கலாச்சாரம் போன்றவை சிலவாகும். இவை பற்றி பலவிதமான, சார்பான, எதிரான கருத்துக்கள் இன்றைய ஒழுக்கவியலிலே இடம் பெறுகின்றன. இவ்வகையில் கருக்கலைப்பு பற்றிய ஒழுக்கவியல் கருத்தக்களை இக்கட்டுரையில் நாம் சற்று ஆழமாகப் பார்ப்போம். கருக்கலைப்பு என்பது இன்றைய ஒழுக்கவியல் துறையில் மட்டுமல்லாது மருத்துவத்துறையிலும், கலாச்சாரத்துறையிலும் இன்னும் அதிகமாக சமய ஒழுக்கவியல் துறையிலும் முக்கியத்துவம் பெற்று விளங்குவது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

## கருக்கலைப்பு

கருக்கலைப்பு பற்றிய பலவிதமான வரையறைகள் இக்காலங்களிலே எழுகின்றன. குறிப்பாகவும், தெளிவாகவும் இதனை வரையறுப்பதாயின் சிசுவின் முழு உருவாக்கத்தினையும் அதன் பிறப்பினையும் தடைசெய்யும் நோக்கில் கரு வளர்ச்சியை முன்னதாகவே சிதைப்பது அல்லது அழிப்பது கருக்கலைப்பு என்று வழங்க முடியும். இவ்வரையறைக்கு உட்படாத பாலியல்ப் பிறழ்வுகள் அல்லது பாலியல் முறைகள் கருக்கலைப்பு எனும் தொகுதியின் கீழ் கொள்ளப்பட மாட்டாது.

இக்கருக்கலைப்பு முறையானது ஒரு சாதாரண நடைமுறையாக மாறிவருகின்றமைக்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றை நாம் ஆராய்ந்து பார்க்க முடியும். திருமணத்திற்கு முன்பாக இடம்பெற்ற உடலுறவினால் ஒரு பெண் கருத்தாங்கும்போது சமூகத்திலே அவளின் பெயரைக் காப்பாற்றும் பொருட்டு கருக்கலைப்பு மேற்கொள்ளப்படுகின்றது. வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும்போது தமது பிள்ளைகளை வரையறுக்கும் நோக்குடன் கருக்கலைப்பு முறையினை மிகப்பெரிய அளவில் பெற்றோர்கள் மேற்கொள்கின்றார்கள். குறிப்பாக உட்கொள்ளப்பட்ட கருத்தடை மாத்திரை வலுவிழக்கும்போது அதன் பாதிப்புகளுடன் உருவாகும் சிசுவை அழிக்க கருக்கலைப்பு பயன்படுகின்றது. மிகப் பொதுப்பட கருக்கலைப்பின் காரணத்தை

நோக்குகின்ற போது தவறான முறையாக பாலியல் இன்பத்தை துய்த்தவர்கள் அதன் விளைவினையும் தங்களது உறவின் இரகசியத்தையும் சமூகம் அறிந்து கொள்வதைத் தடுக்கவே பாரிய அளவில் கருக்கலைப்பை மேற்கொள்கிறார்கள்.

இவ்வாறு பல்வேறு காரணங்களினால் மேற்கொள்ளப்படும் கருக்கலைப்பானது (Abortion) எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். இதற்கு எவருமே எக்காலத்திலும் அனுமதி அளிக்க முடியாது என்றும் ஒழுக்கவியற் துறையிலே பலமான குரல்கள் இக்காலங்களில் ஓங்கி ஒலிக்கின்றன. அதேவேளையில் கருத்தடை நியாயபூர்வமானது, ஏற்றுக்கெள்ளக்கூடியது என்று முன்வைக்கப்படும் கருத்துக்களும் இன்றைய ஒழுக்கவியலிலே உள்ளன. இத்தகைய இருசாரரின் நிலைப்பாடுகளைக் கண்நோக்குவோம்.

## கருக்கலைப்பு நியாயபூர்வமானது

கருக்கலைப்பு நியாயமானது எனக்கருதுபவர்கள் தமது காரணங்களைப் பின்வருமாறு வெளிப்படுத்துவர். அதாவது கரு என்பது தனி மனித முழுமைக்கு நிகரானதல்ல. கருவினை ஒரு ஆள் (Person) எனக் கூற முடியாது. தொடக்ககாலங்களில் கருவானது கலங்களின் கூட்டமைப்பு என்றே கூறமுடியும். இதனிடம் நம்பிக்கை இல்லை-எதிர்கால எதிர்பார்ப்புக்கள் இல்லை. எனவே கருவைக்கலைப்பது ஒரு கொலை என்று கூறவே முடியாது என்று இவர்கள் வாதிடுவார்கள்.

மேலும் பெண்களுக்கு தங்களின் உடல்மேல் பூரணஅதிகாரம் உண்டு. கருத்தங்குதல் என்பது ஒரு சாதாரணநிகழ்வு அல்ல. இதனைப் பெண்ணானவள் ஆத்மீக அர்ப்பணிப்புடனும் பாச உணர்வுடனுமே மேற்கொள்ளமுடியும். இந்நிலையில் அவள் விரும்பாதநிலையில் கருவினைத் தாங்க வேண்டும் என அவளை எவருமே நிற்பந்திக்க முடியாது. எங்களின் ஒழுக்கவியல் நிலைப்பாடுகளுக்காக அவள் கருவை தாங்கவேண்டும் என நிற்பந்திப்பது ஒரு சித்திரவதைக்குச் சமமானதாகும். அவளின் அடிப்படை உரிமைகளையும் தெரிவுகளையும் மதிக்கவேண்டிய கடப்பாடு எம்அனைவருக்கும் உண்டு. சுருங்கக்கூறின் அவள் கருத்தடையை அல்லது கருக்கலைப்பை மேற்கொள்வது அவளின் உரிமையாகும். இதில் தலையிட எவருக்கும் அதிகாரம் எதுவும் இல்லை என்கிறார்கள்.

ஒரு பெண்ணும் ஆணைப்போலவே அனைத்திலும் சம உரிமையும் நிறைவான முதிர்ச்சியும் உடையவள். அவளுக்கும் எதிர்பார்ப்புக்களும், விருப்பங்களும், திட்டங்களும் உள்ளன. தனது வாழ்வினையும், தனது எதிர்கால வாழ்வினையும் செம்மையாகத் திட்டமிட்டு முன்னெடுக்கவேண்டியது அவளின் பொறுப்பு. இதைவிடுத்து சில நிமிடத்தவறுகளுக்காகவும், அனுகூல வேட்கைகளுக்காகவும் முழுப் பொறுப்பினை அவளே சுமக்க வேண்டும் என்று கூறுவதற்கில்லை. அதே வேளையில் கருத்தாங்குதலானது சில வேளைகளில் பெண்களின் உயிருக்கே உலை வைத்துவிடுகின்றது. இன்னும் பலவிதமான உளத் தாக்கங்களையும் உடல் நோவுகளையும் கூட இது தந்து விடுகின்றது. எனவே இப்பேற்பட்ட பிரச்சனைகளில் எல்லாம் பெண்ணானவள் துன்புறவேண்டும் என வற்புறுத்த முடியாது. ஆகவே கருக்கலைப்பினைப் பெண் முன்னெடுப்பாள் என்று சொன்னால் அது நியாய பூர்வமானது. விளங்கிக் கொள்ளக் கூடியது. இவ்வாறாக கருக்கலைப்புக்கு ஆதரவளிப்பவர்களின் வாதங்கள் நீண்டு கொண்டே போகும். இவர்கள் தமது ஒழுக்கவியல் கோட்பாடுகளில் பெண்ணியக்கருத்துக்களுக்கு இடமளிப்பதனை நாம் கண்கூடாகக் காணமுடியும். அதே வேளையில் கருக் கலைப்புக்கெதிரான குரல்களும் ஒழுக்கவியலிலே பலமாகவே ஒலிக்கின்றன.

## கருக்கலைப்பு ஏற்றுக்கொள்ள முடியாதது

கருக்கலைப்பினை எதிர்ப்பவர்களின் கருத்துப்படி கருவானது பிரசவிக்கப்படாத ஒரு குழந்தை. ஒரு மனித உயிர். எனவே கருக்கலைப்பானது திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் ஒரு கொலையே அன்றி வேறில்லை என்பது இவர்களின் ஆணித் தரமான கருத்து.

கருத்தாங்குதல் என்பது உண்மையிலே கடினமான காரியம் தான். ஆயினும் அனைத்து விதமான கடின நிலைகளுக்கும் முகம் கொடுத்து வயிற்றினில் வளரும் பிள்ளையை சமூகத்திற்கு அளிப்பது பெண்ணின் உயரிய கடமையாகும். தனது சொந்த நலன்களுக்காக ஒருவகையில் அவளின் சுய நலத்திற்காக வயிற்றில் வளரும் சிசுவை சிதைப்பது என்பது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு செயலாகும்.

கருத்தாங்குதலானது எப்போதும் மருத்துவ ரீதியிலே ஒரு தாய்க்கு சிக்கலானதாக, அவளின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியதாக உருவாகும் போது கருக்கலைப்பானது தாயின் பாதுகாப்புக் கருதி மேற்கொள்ளப்படுகின்றது. அதை விடுத்து கருக்கலைப்பானது

சாதாரண நடை முறையாகத் தலை தூக்குமானால் அதனை அனுமதிக்கவே முடியாது.

மேலும் கரு வேறு, மனித உயிர் வேறு என்ற பேச்சுக்கே இடமில்லை. ஓர் ஆணின் விந்தும் (Semen) பெண்ணின் முட்டையும் (Egg) என்று இணைகின்றதோ அன்றே உயிர் உருவாகின்றது. மேலும் இவ்வுயிர் நிமிடந்தோறும் வளர்ச்சியடைந்து வருகின்றது. எனவே இதனைக் கலங்களின் கூட்டமைவு என்று கொச்சையாகக் கூறமுடியாது. ஒவ்வொரு பெண்ணும் தன்னுடைய நடத்தைப் பிறழ்வுக்குத் தானே பொறுப்பு. எனவே அதன் விளைவுகளையும் பொறுப்புடன் தாங்க வேண்டிய கடப்பாடு அவளுக்கும் உண்டு. இவ்வாறாக இவர்களின் வாதம் தொடர்ந்து கொண்டு போகின்றது. இவர்களின் போக்கு சற்று கடுமையானதாகவே தென்பட்டாலும் மனித மாண்பே இவர்களின் கோட்பாடுகளின் அடிப்படையாகத் திகழ்கின்றது.

## முடிவுரை

இன்று நாம் இந்த பூமியிலே வாழ்கின்றோம் என்று சொன்னால் எமக்கு அவ் வாய்ப்பினை அளித்தவர்கள் எம் அன்னையர்கள். விதையென நாம் விழுந்ததிலிருந்து கருவாக வளர்ந்து சிசுவாக வெளிவருமட்டும் எமக்குப் பாதுகாப்பும், உயிரூட்டமும் அளித்தவள் எமது அன்னை. எனவே கருக்கலைப்பானது நாளைய சமூகத்தின் நட்சத்திரங்களை ஆரம்பத்திலேயே அழித்து விடுதல் போன்றதாகும். தவறான பாலியல் நடத்தையினாலேயோ அல்லது குடும்பக் கட்டுப்பாட்டு முறைமையின் காரணத்தினாலே உருவாகிய கரு என்னும் உயிரை அழிக்க எவருக்கும் உரிமை கிடையாது. அக்கரு கலக் கூட்டமைப்பாக இருந்தாலென்ன அல்லது மானிட முதிர்ச்சி அடையாததாக இருந்தாலென்ன அக்கருவானது அனைத்து மானிட உணர்வுகளும், திறமைகளும் உள்ளடக்கப்பட்ட (Potential) ஓர் உயிராகவே மதிக்கப் படுகின்றது. எனவே அதை எந்நிலையிலும் அழிப்பது கொலைக்குச் சமமானதாகும்.

நிகழ்கால ஒழுக்கவியலுக்கேற்ப மருத்துவ சிக்கலாக கருத்தாங்குதல் அமையும் போது வேறு வழியின்றித் தாயின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு கருக்கலைப்பினை மேற்கொள்வது ஓரளவில் அனுமதிக்கக்கூடிய தொன்றாகும். மற்றைய எச்சந்தர்ப்பங்களிலும் இதற்குச் சாத்தியமில்லை. கத்தோலிக்க ஒழுக்கவியற் கோட்பாட்டின்படி,

கருக்கலைப்பானது கொலைப்பாவமாகக் கருதப்படுகிறது. ஆன்மாவும் அமையப் பெற்று இறைவனின் சாயலிலே உருப் பெற்று இறைவனால் படைக்கப்பட்ட பாவமறியாத சிசுவினைக் கொலை செய்வது கொடூரம் நிறைந்த கொலைப்பாவமே என அக் கோட்பாடு மேலும் கூறுகின்றது.

ஒழுக்கவியலானது அனைவரினதும் உரிமைகளையும் மதிக்கின்றது. ஒழுக்கவியலின் தோற்றத்திற்குரிய காரணங்களுள் மற்றவரின் உரிமைகளை மதிப்பதும் ஒன்றாகத் திகழ்ந்தது எனலாம். எனவே அவ் ஒழுக்கவியல் கருவில் வளரும் உயிர்களின் உரிமைகளையும் மதிக்கின்றது, அவற்றைப் பாதுகாக்க வேண்டிய தார்மீக கடப்பாடு ஒழுக்கவியலுக்கு உண்டு.

கடுமையாக உழைக்கும் எந்த மனிதனும் ஏழ்மையை அடையமாட்டான்.

-லாண்டன்

எந்த செயலையும், அதற்குரிய காலத்திலேயே செய்ய வேண்டும்.

-அவ்வையார்

பொறுமையே உயர்ந்த தவமாகும்.

-குருநானக்

அறிவுக்கும் எப்போதும் உலகம் தலை வணங்கும். திறமைக்கு ஆதரவளிக்கும். தூய உள்ளத்தை வரவேற்கும்.

-இங்கர்சால்

# அரசும் படைமாட்சியும்

- எமில் எழில்ராஜ்

## முன்னுரை

ஒரு நாடு என்று சொல்லும்பொழுது அதற்கு அரசும் (State) அரசாங்கமும் (Government), அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறையை சுமூகமாகவும், சீராகவும் நடத்துவதற்கு இன்றியமையாதவை. அதேபோன்று ஒரு நாட்டின் அரசிற்கு படை(இராணுவம்) என்பதும் மிக முக்கியமானது. நாட்டின் மக்களிற்கும், அரசிற்கும் எவ்வித தீங்கும் ஏற்படாமல் காக்கவும், தீயசக்திகள் அல்லது பிற நாட்டின் முற்றுகையால் பாதிக்கப்படாமல், ஆக்கிரமிக்கப்படாமல் இருப்பதற்கும், நாட்டைப் பாதுகாக்கவும், மக்களை அச்சமின்றி வாழவைக்கவும், வழிநடத்தவும் படை பலம் இன்றியமையாததாக காணப்படுகின்றது. நவீன அரசுகளில் இப்படை பலம் மிக அவசியமானதாகக் கொள்ளப்படுகிறது.

திருவள்ளுவரின் திருக்குறளிலே படைமாட்சி என்னும் அதிகாரத்திலே படையின் சிறப்பையும் அதன் முக்கியத்துவத்தையும் மிக தெளிவாக எடுத்து கூறுகின்றார். அதேபோல் பல மேற்கத்தைய மெய்யியலாளர்களும் படைக்கட்டமைப்பு ஓர் அரசிற்கு இன்றியமையாதது எனவும் அந்நாட்டின் மக்களை பாதுகாக்க மிகவும் உறுதுணையானது எனவும் கூறுகின்றனர்.

## பிளேட்டோவும் ஏனைய சில முக்கிய அரசியல் மெய்யியலாளர்களும்

பிளேட்டோ ஓர் அரசிற்கு படை எந்த அளவிற்கு தேவை அல்லது முக்கியம் என்பதை மிகவும் தெளிவாக குறிப்பிட்டு அதனை அரசிற்கு அடுத்த படியாக வைக்கின்றார். பிளேட்டோவின் சிந்தனைப்படி ஓர் அரசிலே மூன்று முக்கிய வகுப்புப் பிரிவுகள்

காணப்படுகின்றன. முதன்மையாக ஆளும் வகுப்பு (Ruling Class) அடுத்து இராணுவ வகுப்பு (Warrior Class) இறுதியாக தொழிலாளர் வகுப்பு (Working Class). இதிலே முதன்மையாக விளங்குகின்ற வகுப்பு எந்த வகையிலும் ஏனைய இரு வகுப்புக்களையும் அடக்கியாள முற்படக்கூடாது. மாறாக அவர்களிடம் பண்பாகவும், பாசமாகவும் உறவாடி அவர்களை வழிநடத்த வேண்டும். இவை இங்கு மீறப்படும் வேளையில் இவர்களுக்கிடையில் குழப்பங்கள் ஏற்படும். அதனை பகைமை நிலை அல்லது குழப்ப நிலை (Feverist Condition) எனக் குறிப்பிடுவார். இவ்வாறு ஆளும் வகுப்பு இரண்டு வகையான பகைமைக்கு உட்படும். ஒன்று உள் குழப்பம் (Internal conflict) அடுத்து வெளிக்குழப்பம் (External Conflict). இவ்வாறான வேளைகளில் படை வகுப்பு அரசிற்கு சார்பாக நின்று போர் புரிய வேண்டும். அரசிற்கு எதிரியிடம் இருந்து அச்சுறுத்தல் வரும்போது அதற்கு பக்கபலமாக நின்று போர்புரிந்து அரசையும், நாட்டு மக்களையும் பாதுகாக்கும் பொறுப்பு (படை) இராணுவத்திடமே உள்ளது என்பது இங்கு எவராலும் மறுக்க முடியாது.

அரிஸ்ரோட்டில் படையினுடைய மாட்சியைப் பற்றி வேறுவிதமாக விபரிக்கின்றார். அதாவது ஒவ்வொரு நகரிற்கும் (*Polis* – City states) அதனை வழிநடத்த தனித்தனிப் படைகள் தேவை. அவர்களே அந்நகருக்கு பொறுப்பாக இருப்பார்கள். ஒரு நகர் ஏனைய எந்த நகரத்தின் மீதும் அதிகாரம் செலுத்த முடியாது. ஆனால் போர் என்று ஏதாவது ஆபத்து வந்து விட்டால் அனைத்து நகரின் படைகளும் திரண்டு வந்து எதிரியை முறியடிக்க வேண்டும். இதிலே ஒரு நாட்டிற்கு படையின் பலமும் ஒற்றுமையும் எவ்வளவு முக்கியம் என்பதை கூறுகின்றார்.

தோமஸ் ஹொப்ஸ் மற்றும் மாக்கியவெல்லி ஆகிய மறுமலர்ச்சிக்கால மெய்யியலாளர்கள் நேரடியாகவே 'போர்' என்னும் கருத்தை முன்வைக்கின்றாகள். ஓர் அரசன் எப்பொழுதும் சண்டை செய்ய அல்லது அதன் சிந்தனையோடேயே இருக்க வேண்டும். அரசு என்பது ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட

வன்முறை. அரசின் தலைவன் எப்பொழுதும் மக்களை அடக்கி ஆழ வேண்டும். மக்கள் இவனது குணங்களை அறியமுடியாத அளவிற்கு இவன் செயற்பட வேண்டும். அதே வேளையில் மக்களை எளிதில் கவரக் கூடியவனாகவும் இருக்க வேண்டும்.

இங்கே இவர் போர் என பொதுவாக குறிப்பிட்டு அரசனை மட்டும் குறிப்பிட்டாலும் இதன் பின்னணியில் படை என்பது இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது. எதிரியானவன் தனது நிலத்திலே நிலை கொண்டு விடுவான் என அஞ்சி அதனை முறியடிக்கவே இவன் போர்கோலம் கொள்கின்றான் என தோமஸ் ஹொப்ஸ் விபரிக்கின்றார்.

ஆகவே எந்தவொரு அரசை எடுத்து நோக்கினாலும் அதற்கு படையென்பது இன்றியமையாதது. படையின்றி அரசு இயங்குவது கடினமானதொரு காரியம்.

## திருவள்ளுவரின் கருத்து

திருக்குறளை எடுத்து ஆராய்கையில் படையின் மாட்சி அரசிற்கு எவ்வளவு முக்கியம் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றார் திருவள்ளுவர். ஓர் அரசிற்கு உள்ள எல்லா செல்வங்களையும் விட படையே முக்கியமான, முதன்மையான செல்வம் எனப்படுகின்றது. பல வகையான படைப்பிரிவுகள் அரசிடம் காணப்பட்டாலும் காலாட்படையே அரசனுக்கு மிகவும் முக்கியமானது. படை என்பது அரசனுக்கு ஆபத்துவரும் போது முன்னின்று போர் புரிவதாகும். ஒரு படைவீரனுக்கு நான்கு வகையான பண்புகள் இருக்க வேண்டும்: தைரியம், இராணுவ மகிமை, ஆயுதபலம், மற்றும் உண்மை நேர்மைத்தன்மை. ஒரு படைக்கு அதன் எதிரிப்படையை எவ்வாறு முறியடிக்க வேண்டும் என தெரிய வேண்டும். திருவள்ளுவரின் கருத்துப்படி ஒரு படைக்கு படைக்கலங்கள் அதிகம் இல்லாவிடினும் மனபலம் இருந்தால் அதுவே எதிரியை வெற்றிகொள்வதற்கு போதுமானது. எந்தவொரு படையும் துன்பம், பட்டினி போன்றவற்றை

எதிர்நோக்கினாலும் தனது கொள்கையில் உறுதியாக நிலைத்து நிற்கவேண்டும்.

ஒரு படை எத்தனை ஆயிரம் வீரர்களைக் கொண்டிருந்தாலும் அதற்கு தலைமை என்று ஒன்று இல்லையென்றால் அப்படை நிலைத்து நிற்காது. இவ்வாறு பலவகையான கண்ணோட்டத்தில் படையின் மாண்பையும், பண்பையும் அதன் சிறப்பையும் திருவள்ளுவர் தனது சிந்தனையில் இருந்து ஆழமாக எமக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

## முடிவுரை

மேற்கத்தேய மெய்யியலாளர்களையும் திருவள்ளுவரையும் ஒப்பிட்டு நோக்குகையில் பல வகையான ஒற்றுமைகள் காணப்பட்டாலும், மேற்கத்தேய மெய்யியலாளர்கள் திருவள்ளுவர் கூறிய பல வகையான சிறப்பான அம்சங்களை கூறவில்லை. படை ஒரு கருவி - அதாவது போர்புரியும் ஒர கருவி மாத்திம் என்பதை மட்டுமே மேற்கத்தேய மெய்யியலாளர்கள் குறிப்பிட முயல்கின்றனர்.

ஆனால் திருவள்ளுவர் அதற்கு சற்று மேலாக சென்று படையின் சிறப்பையும் அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களையும், அவர்கள் ஓர் அரசிற்கு, அரசனுக்கு எல்லா வகையான செல்வங்களையும் விட சிறந்த மேன்மையான செல்வம் எனவும் கூறுகின்றார்.

ஆகவே இறுதியிலே படை என்பது எல்லா வகையிலும் ஒரு நாட்டிற்கு இன்றியமையாத செல்வம் என்றே கூற வேண்டும். படையின்றி, படைபலம் இன்றி ஒரு நாட்டின் - அரசனின் பெருமை வெளிப்படாது.

# மெய்யியல் பார்வையில் போரும் வன்முறையும்

- T. குயின்சன் பெர்னான்டோ

போர் என்றால் என்ன? வன்முறை என்றால் என்ன? வன்முறையின் இறுதி வடிவமே போர் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். பொதுவாக போர் என்றால் இதுதான் என்று வரைவிலக்கணம் கொடுக்கமுடியாது. இது வரையறைக்கு உட்பட்டது அல்ல. மாறாக விரிந்து பரந்துபட்ட ஒன்றாகும். இது தொடர்பாக பல மெய்யியலாளர்கள், அரசியல்வாதிகள், சமூகவியலாளர்கள், உளவியலாளர்கள், ஒழுக்கவியலாளர்கள் எனப் பல்வேறுபட்டவர்கள் பல்வேறுபட்ட வரைவிலக்கணங்களைக் கொடுக்கிறார்கள்.

போர் என்பது நாடுகளுக்கிடையில் வன்முறையில் ஏற்படும் மோதல் ஆகும். "போர்" என்ற சொல்லை உள்நாடுகளுக் கிடையேயான ஏற்பட்டமோதல், வர்க்கங்களுக்கிடையேயான மோதல் ஆகியவற்றைக் குறிக்க உள்நாட்டுப்போர், வர்க்கப்போர் என்று பயன்படுத்தினாலும், நாடுகளுக்கிடையே ஏற்படும் மோதலே போர் ஆகும்.

கிறிஸ்தவ மெய்யியலாளர்கள் போர் மற்றும் வன்முறை பற்றிக் கூறும் போது கிறிஸ்துவின் போதனையோடு தொடர்புபடுத்தியே பார்க்கிறார்கள். அவர்களுள் புனித அகுஸ்தீனார் மற்றும் பனித தோமஸ் அக்குவைனஸ் என்போர் சிறப்பானவர்கள் ஆவர். புனித அகுஸ்தினார் எகிப்தியனை மோசே கொலை செய்து கொண்டமையை குற்றம் என்கிறார். அத்தோடு பேதுரு ஜெஸ்தமனியில் மால்குஸ்சின் காதை வெட்டியதும், பவுல் கிறிஸ்தவர்களைக் கொலை செய்ததும் வன்முறை என சுட்டிக்காட்டுகிறார். ஏனெனில் அவர்களுக்கு அதிகாரம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்கிறார். ஒரு தனி நபர் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி தனது சுயவிருப்பின்

பேரில் வன்முறையில் ஈடுபடுவது தவறாகும். போரிலே கொலை செய்வது ஆண்டவருக்குக் கீழ்ப்படியாமை ஆகும். அத்தோடு நிலையான சமாதானத்தைப் பெற்றுக் கொள்ள நீதியான போரை (Just War) தொடங்குவது குற்றமல்ல என்கிறார். “நாங்கள் போரைத் தொடங்குவதற்காக சமாதானத்தை தேடக்கூடாது. மாறாக சமாதானத்தை உருவாக்க போர் புரிய வேண்டும்” என்கிறார். போரின் விளைவு மனத்தாக்கமும், அழிவும், தொடர்ச்சியான பகைமையும், மோதலுமே ஆகும். எனவே மக்களுக்கு சமாதானத்தையும் பாதுகாப்பையும் வழங்க போர்வீரர்கள் தங்கள் பொறுப்புகள், கடமைகளை சிறப்புற செய்யவேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

புனித தோமஸ் அக்குவைனஸ் ஒரு கிறிஸ்தவ தத்துவவியலாளரும் இறையியலாளரும் ஆவார். இவர் போர் மற்றும் வன்முறை பற்றிக் கூறும்போது “போர் ஒன்றை தொடங்குவது பாவம்” என்கிறார். இவர் “நீதியான போர்” பற்றிப் பேசும் போது நீதியான போருக்கு மூன்று முக்கியமான விடயங்கள் அவசியம் என வலியுறுத்துகிறார்: 1. செயற்படுத்தும் அதிகாரம் கொண்டவரால் போர் தொடங்கப்பட வேண்டும். 2. நீதியான காரணம் இருக்கவேண்டும். 3. சரியான நோக்கம் - எண்ணம் இருக்கவேண்டும்.

இவ்வாறாக பலர் பல்வேறுபட்ட கருத்துகளை போர் அல்லது வன்முறை தொடர்பாக வெளியிடுகிறார்கள். ஒவ்வொரு வரைவிலக்கணத்திலும் அதன் பலமும் பலவீனமும் காணப்பட்டாலும் அது அச்சிந்தனையாளரின் மெய்யியல் சார்ந்த நிலைப்பாட்டின் உச்சக்கட்டமாகும். போர் தொடர்பாக டெனிஸ் (Denis Diderot) கூறும் போது, அரசியலினால் கட்டவிழ்த்து விடப்படும் கட்டுப்படுத்த முடியாத வன்முறைசார்ந்த நோயே போர் என்கிறார். கார்ல் ∴வொன் (Karl Von) கூறும் போது பல எண்ணங்கள், முறைகள், நடவடிக்கைகள் என்பவற்றால் அரச அலுவல்களை தொடர்வதற்கான ஒரு நிலைப்பாடே போர் ஆகும் என்கிறார். ரூசோவின் (Rousseau) கூற்றுப்படி போரானது இரண்டு

மனிதர்களுக்கிடையில் அல்ல; மாறாக இரண்டு பொருட்களுக்கிடையில் உள்ள தொடர்பினால் ஏற்படுகின்றது. அதாவது போரானது மனிதத்தொடர்புகளினால் ஏற்படுத்தப்பட்டது அல்ல. மாறாக இரண்டு அரசுகளுக்கிடையில் ஏற்படுவதைக் குறிக்கும்.

சான் ரிச்சார்டு கிரீன் என்பவர் போரினை அறிவீனமான படுகொலை என்று குறிப்பிடுகிறார். அவ்வாறு அவர் குறிப்பிட்ட போதிலும் தனிமனிதனின் தனித்தன்மை அல்லது தனிமனிதன் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டு அதில் இணைந்தள்ளது. பல நூற்றாண்டுகளாக போரும் ஒரு நோய்போன்றது என்று மனிதன் கருதி வந்துள்ளான். சமூக நடவடிக்கையின் மிகவும் ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கையாகப் போரானது சமூக பொருளாதார அரசியல் மாறுதல்களை மிக விரைந்த வேகத்தில் ஊக்குவித்தது. படைத்துறைத் தத்துவ ஞானியான கார்ல் ஃவொன் கிளாசுவிட்சு (கி.பி. 1780 - 1831) (Karl Von Clawsewitz) என்பவர் 'போர் பற்றி' (On War) என்னும் நூலைப்படைத்தார். அந்த நூலில் அவர் பிறவழிவகைகளுடன் கலந்த, அரசியல் உறவின் தொடர்ச்சியே போர் என்று குறிப்பிடுகிறார். போரின் அடிப்படை வன்முறையே ஆகும். 'பாசிசக் கொள்கையர்' போன்ற சிலர் தேசிய உணர்வு பெருகிட போர் இன்றியமையாதது என்று கருதினர். போர் விருப்பம் என்பது ஆண்மைத்திறன் மற்றும் அதிகார வளர்ச்சியினைக் காட்டக் கூடியது. அகஸ்டஸ் காம்டே முதலியோர் போரினைத் தவிர்க்க இயலாத தீமை எனக் கருதினர். மனித சமுதாயத்தின் வளர்ச்சி, இயல்பு, விதிகள் பற்றி ஆய்வோரும் மானிடவியலாளரும் போர் இயல்பானது, மனித இனத்தின் அடிப்படையான நோய் என்றும் கூறினர். ரோல்ஸ்ரோய் (Tolstoy), காந்தியண்ணல் முதலானோர் போர் செய்தல் பாவம் எனக் கருதினர்.

எல்லா நாடுகளிலும் மாறாத நடவடிக்கையாகப் போரினைக் கடந்த கால வரலாறு பதிவு செய்து வைத்துள்ளது. போர் என்பது எதிரியை நம் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள பணிய

வைக்கும் வன்முறையிலமைந்த செயலாகும். இதனை அடைய எதிரியைப் படைக்கருவி இழந்தவனாகச் செய்யலாம். போர்ச் செயலின் நோக்கம் எதிரியை படைக்கலன் துறக்கச் செய்தல் எனலாம். ஆனால் பண்டைக் காலத்தைப் போல் இந்நாளில் அவ்வாறு செய்தல் இயலாது. ஏனெனில் தொழில் புரட்சிக்குப் பின் தோன்றிய படைக்கருவிகள் போரின் இயல்பை மாற்றிவிட்டன. போரின் அடிப்படைக் கொள்கைகள் மாறவில்லையாயினும், தொழில் நுணுக்க முறைகள் மாறிவிட்டன. போரினால் நாடுகளின் போர் செய்யும் எல்லை விரிவடைந்துவிட்டது எனில், அறிவியல் வளர்ச்சியே அதற்குக் காரணம் எனலாம்.

சில சமூகங்கள் மற்றவற்றைவிட மிகுதியான போர்களை நிகழ்த்தியுள்ளன. சிலவற்றிற்கு பெரும் போர்கள் ஏதும் நிகழ்ந்திட வாய்ப்புக் கிட்டவில்லை. அழிவு நேரிடும் நிலை ஏற்பட்ட போதிலும் ஏதென்ஸ் முதலான பண்டைய நகர்கள் தேவைக்கேற்ப எழுச்சி பெற்றன. மொங்கோலியர் தங்களுடைய நாடோடி வாழ்க்கையின் போது போரினைத் தங்கள் சமூக இயல்பாக மேற்கொண்டனர். எனவே வரலாற்றில் அறியப்பெற்ற எந்தச் சமுதாயமும் போரை விட்டொழிக்கவில்லை. இந்தியச் சிந்தனையாளர்களில் கௌடில்யன் எவ்விதத்திலும் போரைத் தடைசெய்யவில்லை. சமண, புத்த சங்கங்களே போருக்கு எதிரானவை. இத்தகைய நிலைக்கு சங்ககாலம் முதலான தமிழ்ச்சமுதாயமும் விதிவிலக்கல்ல. தமிழ் சமுதாயம் மக்களின் முதன்மைத் தொழில்களுள் ஒன்றாகப் போர்த் தொழிலைக் கொண்டிருந்தது.

## போரின் தோற்றத்துக்கான காரணங்கள்

போரின் தோற்றம் எங்கும் பொதுவான சில காரணங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும். குறித்த சில நாடுகளில், குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில், தனிக் காரணங்கள் இருக்கும். வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர், பண்டைய போருக்கான காரணங்களைத் தொகுத்து அளிக்கிறார்.

1. சமுதாயத்தின் மனச் சூழ்நிலை சாதி அடிப்படையில் இருத்தல்
2. உளவியல் அடிப்படையில் அமைதி பற்றிய வறட்சி இயல்பு
3. பேராண்மை வீரச்செயல்கள்
4. மனிதனின் போர்த்திறன், போர்த்திறவியல்பு
5. பாதுகாப்பு வேண்டும் என்ற உணர்வு
6. கோபத்துடன் கூடிய நடத்தை, பொறாமை உணர்வு
7. பேராசை

இவர் சுட்டிக்காட்டியனவற்றுள் ஒன்றினுள் மற்றொன்று அடங்கலாம்.

போர்கள் நடைபெற்றதற்கான காரணங்கள் என்று ஒரு சிலவற்றை இங்கே சுட்டிக்காட்டலாம். ஆனால் இவையே முடிந்த முடிவுகள் ஆகா என்பதும் குறிப்பிடத்தக்கது. இவை பொதுக்காரணங்கள் எனவும், சிறப்புக் காரணங்கள் எனவும் கொள்ளப்படும்.

போர் மனிதனுக்கு இயல்பானது என்னும் கருத்தும், மரபுப் பகைகள், வெற்றிபெற்று நிலப்பகுதிகளை தம்முடன் இணைத்திட வேண்டும் என்ற தணியாத வெறி, பொறாமை, பிறருடைய ஏற்றம் கண்டு சகித்திட இயலாமை, மணஉறவுகள் ஏற்படாமை, படைவலிமை மிதமிஞ்சுதல்,, படைவெற்றி சிறப்புச் சேர்க்கும் என்னும் நம்பிக்கை, வீரம் உயர்வாகப் போற்றப்படும் நிலை, தேசிய அவமதிப்பைச் சகியாமை, எல்லைகள் வகுக்கப்படாமல் எல்லைகள் மீறப்படுதல், போரே மற்றொரு போரை உருவாக்குதல், இனஉணர்வுச் செருக்கு, வணிகத் தடைகள், சமயப்பரப்பு நோக்கம், உலகைக் கட்டியாழும் ஆர்வம் ஆகியன குறிப்பிடத்தக்க போர்க் காரணங்கள் ஆகும்.

தொடக்க காலத்தில் கூட்டம் கூட்டமாக வாழ்ந்த மனிதன் போர் நிகழ்த்துகையில் வேட்டைக் கருவிகளைப் பயன்படுத்தி தரையில் போர் செய்தான். பின்னர் காலம் செல்ல கடலில் போர் செய்தான். அதன் பின்னர் விண்ணில் போர் செய்தான். இன்று இருந்த இடத்திலிருந்தே பொறியைத் தட்டி ஏவுகணை வாயிலாக

எதிரியை அழிக்கும் போர்த்திறன் பெற்றுவிட்டான். காலாட் படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை என்பனவெல்லாம் அறிவியல் வளர்ச்சியினால் மாறிவிட்டன. எப்படி இயந்திரங்களின் பெருக்கம் சமுதாய மாறுதலைத் தோற்றுவித்ததோ, அது போலவே படைக்கருவிகளில் தோன்றிய புதுமைகள் போரின் வகைகளை மாற்றிவிட்டதோடு உலகையும் மாற்றிவிட்டன.

## முடிவுரை

போர் மனிதனின் நாகரீக முதிர்ச்சிபெற்ற இயல்புகளை எடுத்துக் காட்டுகின்றதேயன்றிப் பண்புள்ள நாகரீகம் வாய்ந்த சமுதாய நடவடிக்கைகளை எடுத்துக்காட்டவில்லை. போர் சமூக, அரசியல், பொருளாதார, மாறுதலுக்குத் துணைபுரிந்துள்ளது. ரஷ்யச் சிந்தனையாளர் ரோல்ஸ்ரோய் 'போரும் சமாதானமும்' என்னும் நூலை எழுதினார். ஊலகில் பல காப்பியங்கள் தோன்றிடப் போர்கள் காரணமாயின. மனிதச் சட்டங்களும் பன்னாட்டுச் சட்டங்களும் போரின் விளைவால் வகுக்கப்பட்டன. பல நாடுகளில் பொருளாதாரச் சீரழிவிற்கும், வலிமையிழப்பிற்கும் போர்களே காரணமாயின. அறிவியல் வளர்ச்சி போருக்குத் துணைபுரிந்தது போலவே, போர் அறிவியல் வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தது. முன்பெல்லாம் ஒரு போரே மற்றொரு போருக்குக் காரணமாக விளங்கிற்று. ஆனால், இப்போது போரே, பெரும் அழிவுப் போர் ஏற்படாமல் காத்து நிற்கிறது.

முதல் உலகப் பெரும் போர், இரண்டாம் உலகப் பெரும் போரை உருவாக்கியது. ஆனால், இரண்டாம் உலகப் போர் மூன்றாம் உலகப் பெரும் போர் நடைபெறவிடாமல் தடுத்துள்ளது. இனி ஒரு போர் எனின் அழிவது 'நான்' அல்லது 'நீ' என்று இல்லாமல் 'நாம்' என்று காட்டியுள்ளது. இதனையே போரினால் ஏற்பட்ட பெரும் விளைவு எனலாம்.

வில்லியம் ஜேம்ஸ் (கி.பி.1842 - 1910) அமைதி வழியிலான போட்டி மெல்ல மெல்ல பூசல்களை விலக்கிடும் எனவும், சமுதாய நலத்திட்டங்களில் இளைஞர்களை

ஈடுபடுத்துவதன் வாயிலாக நாடுகள் போருக்கு மாற்றீடு காணும் எனவும் கூறுகிறார். வன்முறையிலான உணர்வுகளுக்கு வடிகால் காணுவதே போரைத் தடுக்கும் வழி என்று சம கால அறிவியலாளர்கள் கருதுகின்றனர். வேலையில் ஈடுபாடு, விளையாட்டில் ஆர்வம், போர் அழிவுபற்றிய திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்வுகளைத்தடை செய்தல் முதலியவற்றின் வாயிலாக வன்முறை உணர்வுகள் தடுக்கப்படலாம்.

ஆயுதம் ஏந்திச் சமுதாயத்தை அழிக்கும் படைக்கருவிகள் கொண்டு போர் நிகழ்ந்ததன் விளைவாகக் கடந்த 50 வருடங்களாக உலகில் பெரும் போர் நிகழா நிலை ஏற்பட்டுள்ளது. ஏனினும் போர்களே நிகழவில்லை, மனித உயிர்கள் பலியாகவில்லை என்று கூறவியலாது. வியட்நாமிலும், பலஸ்தீனத்திலும், ஆப்கானிஸ்தான், ஈராக், ஏன் எமது நாட்டிலும் இலட்சக்கணக்கான உயிர்கள் பலியாயின. மனித இனத்தின் கொடுமைகள் மாறாத வரை, விட்டுக் கொடுத்து அமைதி வழியில் பேசித் தீர்ப்பதிலேயே முழுவெற்றி என்பதை உணராதவரை போரில்லா உலகைக் காண்பது அரிது எனலாம். உலக அமைதி நிறுவனம் வலிமை பெற்றால், உலகைக் கட்டுப்படுத்தும் திறன்மிகு நிறுவனமாக உண்மையிலேயே அமைந்தால் போர் உலகினின்று மறையும் என்று நம்பலாம்.

### துணை நின்ற நூல்கள்:


1. SOMERVILLE, JOHN SANTONI, *Social and Political Philosophy*, New York: Doubleday & Company, 1963.
2. GILL ROBIN, *A text Book of Christian Ethics*, Edinburgh: University Printing Press, 1985.
3. POTTER. B. RALPH, *War and Moral Discourse*, Virginia: John Knox Press, 1952.
4. சமாதான நோக்கு, 3(ஆகஸ்ட், 2003)1.
5. http://www.anthropoetics.ucla,edu/apo.02/home.html.

## இவ்விதழின் மெய்யியலாளர்:



# மகாத்மா காந்தி

அ. மைக்டொனால்ட்

மகாத்மா காந்தி 1869ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ம் திகதி குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னும் ஊரில் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் காபா காந்தி. தாயார் பெயர் புத்லீபாய் என்பதாகும். இராச்கோட் என்னும் தொடக்கப்பள்ளியில் ஏழு வயதில் சேர்ந்தார். இவர் தனது பதின்மூன்றாவது வயதில் கஸ்தூரிபாய் என்பவளை திருமணம் செய்து கொண்டார். 1892ம் ஆண்டு இவர் வழக்கறிஞர் என்ற பட்டத்தை இங்கிலாந்தில் பெற்றுக்கொண்டார்.

தென்ஆபிரிக்காவில் இந்தியர் உரிமைக்காகப் போராடி குடிஉரிமைச் சிக்கலைத் தீர்த்துவைத்தார். தென்ஆபிரிக்காவில்தான் முதன் முதலில் சத்தியாக்கிரக ஆயுதத்தைப் பயன்படுத்தினார். சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை இயக்கம் முதலிய சாத்வீகப் போராட்டங்களை மக்களுக்கு கற்பித்து அதில் வெற்றியும் கண்டார். தீண்டாமை என்னும் கொடுமையை ஒழிக்கப் பெரிதும் பாடுபட்டார். 1915ம் ஆண்டு அகமதாபாத்தில் சபர்மதி ஆச்சிரமம் ஏற்படுத்தினார். 1917ல் இருந்துதான் காந்திஜி இந்திய அரசியலில் பங்கு கொண்டார். பீகார் மாநிலத்தில் சம்பரான் பகுதியில் உள்ள உழவர்கள் அரசின் கொடுமையை தாங்க முடியாமல் வாடியதை எதிர்த்தும், 1919ல் ரௌலட் சட்டத்தை எதிர்த்தும் சத்தியாக்கிரகம் செய்ததற்கும் சிறைத்தண்டனை அனுபவித்தார். அகிம்சா முறையில் சுயராஜ்யம் பெறுவதென்றும் அந்நியத் துணிகளை பகிஸ்காரம் செய்வதென்றும் தீர்மானம் எடுத்தார். இந்து - முஸ்லிம் ஒற்றுமை குலைந்தபோதும், ஆச்சிரம வாசிகள் தவறாக நடந்து கொண்டவேளைகளிலும் உண்ணாவிரதம் இருந்தார்.

1930ல் காந்தி - இர்வின் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த உடன்பாட்டை அரசு மீறியதால் இதை எதிர்த்து அறப்போரில் ஈடுபட்டதால் கைதுசெய்யப்பட்டார். 1934ம் ஆண்டு பூனாவில் காந்தி பேசிய கூட்டத்தில் குண்டு வீசப்பட்டது. பல வகுப்பு கலவரங்களை அடக்க பெரிதும் பாடுபட்டு உழைத்தார். 1942ல் 'வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, வெள்ளையருக்கு எதிராக அறப்போராட்டத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டார். 1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி இந்தியா சுதந்திரம் அடைவதற்கு காரணகர்த்தாவாக விளங்கினார். பிரிட்டனிடமிருந்து ஆயுதம் இல்லாத போராட்டம் நடத்தி சுதந்திரம் பெற்றுக்கொடுத்தவர் என்ற பெருமைக்குரியவர்.

அறவழியே ஒரு நெறியாய், சமயமே வாழ்வின் அடிப்படையாய் வாழ்ந்தவர் காந்தி. அவர் வாழ்க்கையில் அற்புதம் ஒன்றும் நிகழ்ந்ததில்லை. அற்புதங்களை போற்றி பேசுவதில் அவர் கருத்துச் செலுத்தியதும் இல்லை. மாறாக இன்னா செய்யாமை, அகிம்சை என்னும் அறத்தையே அவர் சமய நெறியாகக் கொண்டு, உண்மை என்னும் கடவுளை வணங்கி இன்னா செய்யாமல் வாழ்ந்தார். காந்திஜியின் வாழ்க்கைக்கும் அவரது போதனைக்கும் இடையே வேறுபாடு இல்லை. காந்தி தமது இந்திய நாட்டுச் சிந்தனையில் ஊறியிருந்ததால் சத்தியாக்கிரகம் என்ற சொல்லின் மூலம் உலக சிந்தனைக்கு தமது பங்களிப்பினை வழங்கினார். சத்தியாக்கிரகத்தின் பொருளானது உண்மையை வற்புறுத்துதல் ஆகும். வெறுப்பை வெறுப்புக்கொண்டும், வன்முறையை வன்முறையைக் கொண்டும், தீமையை தீமையைக் கொண்டும் எதிர்த்தலாகாது. அகிம்சையாலும் உண்மையாலும் எதிர்க்க வேண்டும் என்ற தனது வார்த்தையை வாழ்வாக்கிய மகாத்மா காந்தி 1948ம் ஆண்டு நாதுராம் கோட்சே எனபவனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

Synopsis:

# Non Violent Communication

- S. Douglas Milton Logu

Dr. Marshall Rosenberg is the founder of the non-violent communication. In 1984, he stared a centre for non-violent communication. Since then it has been functioning with 150 specialists in thirty countries in six continents. The non-violent communication centre gives formation to the people of different states.

In communication we have two types: 1. The words which hurt the other persons easily 2. The words that gives solace joy and satisfaction to the other persons. Marshall compares these types with two animals namely: the Jackal and the giraffe. We can easily find out whether it is the mentality of jackal or giraffe from a person's communication.

This type always has the negative approach regarding the other persons. It looks always into the other persons weaknesses inability and such negative aspects. It does not care about the future but tries to fulfill the present immediately. It speaks about the negative qualities of others saying "you are a fool", "you are bad" and "you are inferior". This type induces self-defense, contradiction and counter attack.

It flows from the language of the heart of a person. It develops growth, happiness and deep relationship among the people. As Giraffe has a big heart and it is the biggest compared with other animals. Therefore, the people who has this nature will speak from their depth of hearts. They do not have the negative ideas about others. They never judge others immediately.

Therefore Marshall Rosenberg says that mentality of giraffe is a "language of petition" and the mentality of jackal is the "language of compulsion". In the latter man becomes a slave when he does not have the freedom to choose what is favorable to him in his life.

Finally, those who have the nature of giraffe never compel others in their communication. They take the responsibility for their feelings, emotions and actions. Hence Marshall says that we have to have the nature of giraffe because it helps positively the people with whom we communicate.

***

# The Language Game in Conflict Negations

- S. F. Kirupananthan

The word peace refers different meaning to different people in the island of Sri Lanka. The conflict has to be understood within the framework of culture and culture is an essential part of conflict resolution. The people of the same cultural set up may share the same race, ethnicity or nationality, but they are also a part of inner cleavages of socio economic class, gender relationship, political afflictions and religious beliefs. They are often unconscious and subtly expressed in conflict. The human language is needed to express whatever we have in the mind. Here we are trying to analyze the concept of language game which was introduced by Austrian born linguistic analysis Ludwig Wittgenstein. The Intercultural Communication could help to resolve current conflicts in Sri Lanka.

***

# Human Violence and Ecological Damages

- S. A. Jestin

Man is closely connected with nature. We can't deny this ultimate fact but there are some occasions when man has totally turned against nature by his own activities.

In today's world it is a prime issue and also a kind of challenge against the whole universe. Every day there are some kind of improvement in the field of science, economics, politics, technology, games etc. We think these are all showing us the ultimate and intelligence superpower of man and his immeasurable human mind's capacity. On one side it is a kind of success to the whole humanistic world but on another side it is a kind of curse to humanity. Mother Nature is very friendly with man but man by his own activity creates the Nature against him. It is an accepted fact by the whole universe that nature has also been teaching us a good lesson during the last years, in the form of tsunami, earthquakes, cyclones etc.

So in this terrible situation I am writing this article so that you can come to know the relationship between nature and man; how man damages the nature; and also to know the ways and means that are best suited to avoid the dangers from nature and from human manipulation of nature.

***

# The Anthropology of Violence

- J. Paul Rohan

Thomas Hobbes brought out the intrinsic nature of man as a warring animal. He compared man with 'Leviathan' which is always in search of its preys.

In the present human society omnipresent, violence reaches us and strikes us by its glares always in the forms of crimes, wars, massacres and by its daily pressures. Is it not advisable to admit that violence is in the root of human nature? It would then be necessary to have courage to think, after considerations of man as 'Homo Sapiens', 'Homo Vivens', 'Homo Volens', 'Homo loquens', 'Homo culturalis', 'Homo laboris', 'Homo socialis', 'Homo economicus', this "homo violens", which poses itself with other fields like morality, philosophy, anthropology, sociology etc. This question of violence is more frightening the world than ever. The study of violence presents far greater dilemmas for anthropologists today.

Hobbes defined social life not as essentially violent in itself, but rather as the alternative to violence. Men in their natural state of life had a life of terror and 'every man against every man'. In order to avoid such a fearful and violent life they came together and made a social agreement and handed over their sovereignty to a powerful man. Thus social and political life came into existence. But the original life of humanity was full of violence and terror. That is why Thomas Hobbes defines man as naturally violent and this violence forms a part of human nature.

Niccolo Machiavelli (1469 - 1527) in the West and Kautilya (4th Century B.C) in the East had their views about the leaders of society as always in search of power by means of violence and brutality. Machiavelli's *'The Prince'* and Kautilya's *'The Treatise on Government'* are dealing with the same subject matter - that is, instructing the leader of the people on terrorizing and exercising violence on the subjects to maintain the rule.

Thus time has come for a new consideration of man as 'Homo violens': this consideration is not to support or encourage violent activities, but to face the reality of human nature and to accept that man is intrinsically violent. This will bring an acceptance on the part of human beings about their reality and help them deal with this grave issue. The

history of anthropology right up to the 1960s could be written as the history of theories about the societal construction of a generalised condition of non-violence. They purposely avoided to face the reality of human violence. But the study of 'Homo violens' will also contribute to the study of the non – violent man as 'Homo pacatus'.

***

## The History of Eelam Struggle on the Basis of Ahimsha (Non Violence)

-M. Kingston Suman Raj.

Mahatma Gandhi is praised as the Father of "Non-violence." or Ahimsha". Gandhi proved that the greatest of this world is not "God" but "Truth". He promoted "Non- Violence" and "Love" in India. He fought for the freedom not by arms but through Non-violence It attracted many other countries also. Gandhi taught the people how to forgive the person who committed crimes against them. Hence, he won the freedom through the way of non-violence "Ahimsha".

He is considered as the king of Peace and as the man of Non-violence. He was a socialist who never cared for caste and colour but considered every body equally. He gave his voice for the freedom of the Black people from the White people. He was attracted by the teaching of Jesus Christ that is "Love your enemy as yourself". Violence never wins violence. He dedicated himself fully for the freedom of the Black people.

He, for the Freedom of Tamil, used the very way of non-violence. We have to say the "Truth" to the Government by the way of "Ahimsha". The arms struggle would be lost, not the "Ahimsha"

For the freedom of the Tamil people and Eelam, he dedicated himself totally. The Government of Sri Lanka oppressed and suppressed the Tamils and especially the Indian Tamils because they are a minority. He tried to solve this problem following the way of Gandhi. Therefore, he is called the Father of Eelam of "Ahimsha"

Finally the way used by Gandhi continued in the struggle for our freedom.

***

# Philosophical View on Freedom and Society

- A. Rocksan Croos

Here, we speak on what freedom is and whether man has the freedom in the full sense. To understand the nature of freedom, it is necessary, first of all to establish in what way the free act develops itself. Saint Thomas and many authors distinguish three principal moments in the free act such as:

(i) Deliberation (it is the phase of exploration, research and inquiry about the object of the acquisition or the action to perform)

(ii) Judgment (It is the phase of Evaluation)

(iii) Election (It is the phase of decision)

The free act require first of all, that, that which is wished to be done is known, and therefore implies an attentive examination of the action that is wished to be performed or the object that is wished to be reached. This action is due to the result of a dialogue between the intellect and will.

St. Thomas says, "the free act belongs substantially to the will, while also depending essentially on the intellect".

Hence, freedom is the faculty which man enjoys to determine himself to an action and to being its cause, after having taken consciousness of the considerations that such an action carries for his life man is the author of the free act and also it is a gift of man. With freedom, man is not only simply the master of his own acts, but also of himself; he is the master of his own becoming.

But, in the present reality, man is not free because he is controlled by the external existing forces, the external forces impose the control on man in thinking and acting. In a way man is enslaved. Therefore, he is not free in a real and strict sense in the society.

***

# MAN'S SEARCH FOR MEANING

- G. Jeyarasa

In this modern scientific world, man becomes as machine in his daily life. But still, man in himself has the natural eagerness to search for meaning of his life and existence. Some say material properties, possessions and treasure give meaning to his life but still some say, to give meaning to the life is treasure – People select different ways and style of life but very few find the meaning of life.

Nowadays we see, people think that money, statues, possessions and material goods give meaning to life. This is not true and not permanent. Nevertheless, the eagerness of man is not fulfilled only in material possessions but day by day his eagerness increases and his thirst to find the meaning of life increases. Then man searches for a spiritual meaning by going into his own self and inner being.

But we see man's search for meaning continues differently for each one because the search depends on man's personality, education, intellectual capacity, social background and motivation of his life. The search of man for meaning is common but each one searches for meaning in different ways. The search is not meant that man in his own wishes and fancies chooses and lives; but lives according to his vocation, future, service and talents. When he finds the meaning then material goods, happiness of the world and power become as nothing and emptiness. Therefore, to find the meaning fully we have to go into the inner depth of heart and life.

***

# Abortion in Ethics

- Vimalaraj, OMI

Abortion is the act of terminating a pregnancy prematurely. It is done in order to prevent the baby from developing and being born alive. There are several reasons for performing this act; when the pregnancy becomes a threat to the mother's life, in order to save the life of the mother; when a girl becomes pregnant due to pre – marital sex, in order to safeguard her honor in the society; when the parents want to limit the number of their children.

In the ethical world, there are some persons who are for abortion. They would argue that a fetus is hardly a person in the earliest stages; it is nothing but a mass of cells! Hence we cannot say abortion is a deliberate murder. Women have a right over their own body. An unwanted pregnancy is an intrusion on a women's right over her body. Pregnancy implies hardships for women. An unwanted pregnancy involves emotional burdens as well as physical ones. A woman is a full – fledged person. She has real desires and fears, real aspirations and memories. They are to be respected as their rights.

But at the same time, there are also others who are opposed to abortion. They would argue as follows; Human life begins at conception and hence aborting a fetus is equivalent to a deliberate murder. The only occasion you may procure an abortion is when it becomes a serious risk for the mother's life and the principal of double effect becomes applicable here. Finally ethics respects the freedom and the rights of all. So it respects not only the rights of women but also the rights of the unborn child in the world.

***

# The State and the Need for a Military

- V. Emil Elil Raj

If the portion of land is called country, it is indispensable and very necessary to have a state and government for the smooth living of the people in that country. Further more, it is unavoidable to have a military force in that country to resist all the oppositions both from inside and outside. In *Thirukkural*, written by one of the great sages of the Tamil ancient society, namely *Thiruvalluvar*, the appraisal of the army is taking place and the necessity of 'military force' is explained very elaborately.

And many philosophers of the western society as well emphasize that military force is very important for the ruling of a country.

Plato would say that in a country, military is very essential to protect a sovereign country from its internal and external forces. According to Plato's a country will have three classes:

1. Ruling class
2. Warrior class
3. Working class

When the state faces conflict situations the warrior class must rise up to protect the the ruling class at any cost. According to *Thiruvalluvar* having an obedient army would be the most valuable asset for a king. When a king gets opposition from his enemies the warriors fight for him and save him from his enemies. Each warrior must have four basic qualities, such as 'strength, boldness, truthfulness and warrior glory'. There may be thousands of soldiers in a country, but it is of vital important to have a 'proper and guiding leader.'

***

# Philosophical Point of View of War and Violence

- T. Quinson Fernando

War is a brutal and ugly enterprise. Yet it remains central to human history and social change. What is certainly true, in any event, is that war and its threat continues to be a force in every man's life. War's violent nature and controversial social effects, raises troubling questions for any thoughtful person.

There are philosophers and other authors who give their definitions for war in different ways. The Christian philosophers especially St. Augustine and St. Thomas Aquinas speak about war and violence on the teaching of Jesus Christ. According to St. Augustine violence and war are totally wrong and we do not have any authority or right to take life, because life belongs to God. However, finally he accepts that some wars can be justified for right intention. For Clausewitz, war is the continuation of politics by other means. Denis Diderot comments that war is a convulsive and violent disease of the body politics.

In recent history we have met many wars, including two world wars. Not only armies, but also cities and civil populations have been targeted. When we see why these wars are happening, there are some basic causes such as desire for more land, wealth, power, and security. There are

some more reasons for man to start a war: for the benefits of religion, economy, politics and identity.

Violence affects the population through terror, destruction of personal property and loss of loved ones. All these point to the urgent need to build peace in our world.

**The Philosopher of this Issue:**

## Mahatma Gandhi

-A. Mac Donald

Mahatma Gandhi was born on 02 October 1869, in Porbandar, India. His father's name was Gaba Gandhi and mother's name was Puthlipai. When he was 13 years old, he got married and he had four children. He received his formal education in India and went to London and became a barrister. When he saw the Indians suffering from various discriminations in South Africa, he began to use his new method of non-violent actions to win their rights. As a result of this, he was arrested many a times, but his efforts brought important reforms.

His life was guided by the continuous search for truth. He developed a method of direct social action based upon the principles of courage, non-violence and truth, which he called '*Satyagraha*.' Satyagraha was used as a method to fight for Indian's independence and to bring about social reforms in Indian society. He preached non-violence in his long campaign for freedom and social reforms and he won freedom for India. He was assassinated in 1948.

***

## GLOSSARY – அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| 1. | Sequence | - முறைவரிசை |
| 2. | Linear | - நேர்வரிசை, வரிசைமுறை |
| 3. | Non- Linear | - பிறழ்வரிசை |
| 4. | Narrative Structure | - வருணனையமைப்பு |
| 5. | Discourse | - பகர்வு, மொழிப்பகர்வு |
| 6. | Cyclic Structure | - வட்டச்சுழல் முறை |
| 7. | Motif | - இழைபொருள் |
| 8. | Plot | - கதைப்பின்னல் |
| 9. | Complexity | - செறிவுச்சீர்மை |
| 10. | Metaphor | - உருவகம் |
| 11. | Icon | - வடிவப்படிவம் |
| 12. | Irony | - முரண் |
| 13. | Twist | - சுழற்றுக்கள் |
| 14. | Formula | - வாய்ப்பாடு |
| 15. | Theory of relativity | - சார்பியல் கோட்பாடு |
| 16. | Reference Frame | - நிலைமச் சட்டகம், ஆய்வுச்சட்டகம் |
| 17. | Macro Context | - தற்புறச் சூழல், புறச்சூழல் |
| 18. | Alienation | - அந்நியமாதல் |
| 19. | Proselytizer | - மதமாற்றி |
| 20. | Flash back | - பின்னோக்கு |
| 21. | Stream of Consciousness | - நனவோடை |
| 22. | State of rest | - ஓய்வு நிலை |
| 23. | Velocity | - திசைவேகம் |
| 24. | Forces of Friction | - உராய்வு விசை |
| 25. | Paradox | - புதிர், முரண்பாடு |
| 26. | Clock Paradox | - கடிகார புதிர் |
| 27. | Freezing | - உறைவு. |
| 28. | Recent Past | - அண்மையிறந்த காலம் |
| 29. | Distant Past | - சேய்மையிறப்பு |
| 30. | Remote Past | - பழைமையிறந்த காலம் |
| 31. | Genre | - இலக்கிய வகை |
| 32. | Typology | - வகை நிலையியல் |
| 33. | Characterization | - பாத்திர உருவாக்கம் |
| 34. | Point of View | - நோக்கு நிலை |
| 35. | Interior Monologue | - தனிநிலைக்கூற்று, அகமனக்கூற்று |
| 36. | Literary History | - இலக்கியத்தின் வரலாறு |
| 37. | Genetic history | - படிநிலை வளர்ச்சி வரலாறு, தோற்ற வளர்ச்சி |
| 38. | Horizontal | - கிடைநிலை |
| 39. | Vertical | - செங்குத்து நிலை |
| 40. | Environmental Cause | - சூழமைவுக் காரணம் |
| 41. | Milieu | - மொத்தச்சூழல் |
| 42. | National Mind | - தேசிய உள்ளம், தேசிய மனவுணர்வு |
| 43. | Social determinants | - சமுதாய நிகழ்வுறுதி |
| 44. | Social hierarchy | - சமுதாயப்படிநிலை |
| 45. | Personality Structure | - ஆளுமையமைவு |
| 46. | Micro Context | - தற்சூழல், நிண்சூழல் |
| 47. | Moral /Ethical Criticism | - அறிவியல் / நீதிமுறைத் திறனாய்வு |
| 48. | Hermeneutics | - புலப்பாட்டு முறைத்திறனாய்வு |
| 49. | Prescriptive | - விதிமுறை |
| 50. | Style – Statistics | - நடையியல் புள்ளியியல் |

# மெய்யியல் நோக்கு

(வருடம் இருமுறை)

| | |
|---|---|
| தொகுப்பாசிரியர்: | யோ. போல் றொகான், L. Ph. (Rome) |
| துணையாசிரியர்: | அ. றொக்சன் குருஸ், B. Ph. (Rome) |
| விநியோகம்: | S. யூட் ஷைலன், CMF, (இளங்கலை மாணவன்)<br>S. விமலசேகரன், (இளங்கலை மாணவன்) |
| ஆலோசகர்கள்: | லூயிஸ் பொன்னையா, O.M.I., L. Ph. (Rome)<br>சா. பி. கிருபானந்தன், M. M. R. Sc. (Leuven) |
| வெளியீடு, விநியோகம்: | மெய்யியல்துறை<br>சவேரியார் குருத்துவக் கல்லூரி<br>கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். |

# MEI - IYAL NOKKU

(BI -ANNUAL)

| | |
|---|---|
| Editor: | J.Paul Rohan, L. Ph. (Rome) |
| Sub Editor: | A.Rocksan Croos, B. Ph. (Rome) |
| Distributors: | S.Jude Shylon,cmf, (Under Graduate)<br>S.Vimalasekaran, (Under Graduate) |
| Consultants: | Louis Ponniah,O.M.I., L.Ph. (Rome)<br>S.F Kirupananthan, M. M. R. SC. (Leuven) |
| Publishers, Distributors: | Faculty of Philosophy<br>Xavier's Seminary<br>Columbuthurai, Jaffna. |


**இலச்சினை விளக்கம்:**

எல்லையில்லா அகிலத்தில்
எல்லையுள்ள உலகினில்
சிந்திக்கும் மனிதன்
எழுப்பும் கேள்விகள்
எழுத்து வடிவில்.

our Logo
Boundless Universe
Limited World
Reflecting Man
Raising Questions
In Written Form.


**அட்டையிலுள்ள உடையக்கூடியது! கவனம்!**

**[illegible]ளுக்கு உயிர்கொடுத்தவர்கள் S. செபஜீவன், J. J. ஜெகானந்தன்**

# மெய்யியல் நோக்கு

அன்புமிக்க வாசகர்களே!

இவ்வெளியீடு பற்றிய உங்கள் கருத்துக்கள், விமர்சனங்களை ஆவலோடு எதிர்பார்க்கின்றோம்

ஓர் ஆண்டிற்கு இரண்டு இதழ்களாக "மெய்யியல் நோக்கு" தொடர்ந்து வெளிவருகிறது.

தனிப்பிரதி ஒன்றின் விலை ரூபா 25/=

"அறிவாளிகளுக்கும், பிரபுக்களுக்கும் என்றிருந்த மெய்யியலை வீதிகளுக்கும், பாதையோரங்களுக்கும், சந்தைகளுக்கும் கொண்டு வாருங்கள்."

- சோக்கிரட்டீஸ்

## அனைத்து தொடர்புகளுக்கும்:

"மெய்யியல் நோக்கு"
சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

J. S. Printerss, Pandatheruppu.